வை. மு. கோ. 94

# அருணோதயம்

சமூக நாடகம்

**வை. மு. கோதைநாயகி அம்மாள்**

ஜகன்மோகினி காரியாலயம்
26, தேரடி வீதி
திருவல்லிக்கேணி, சென்னை 5.

7]                    [அணா 12.

2 APR. 1951
MADRAS

,2MKN, A
N51

# அருணோதயம்

## நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| ஸேதுராமய்யர் | ஒரு உத்யோகஸ்தர் |
| மீனாக்ஷி | அவர் மனைவி |
| சந்திரசேகரன் | அவர்கள் புதல்வன் |
| இந்திரா | அவர்கள் புதல்வி |
| லக்ஷ்மீபதி | ஒரு உத்யோகஸ்தன் |
| நாகஸ்வாமி | மீனாக்ஷியின் சகோதரன் |
| பார்வதி | நாகஸ்வாமியின் மனைவி |
| மைதிலி | நாகஸ்வாமியின் மகள் |
| ஸரளா M. A. | நவநாகரிக நங்கை |
| சங்கர் | ஸரளாவின் பிதா |
| உமா | ஸரளாவின் தாய் |
| லக்ஷ்மி | மீனாக்ஷியின் வேலைக்காரி |
| மகாதேவன் | கல்யாணத்தரகன் |

இன்னும் பலவித நடிகர்கள்.

ALL RIGHTS RELATING TO THIS DRAMA
WHOLLY BELONG TO:—

Sri V. M. Kothainayaki Ammal,
*Editor*, 'JAGANMOHINI'
26, Car St,
Triplicane. (*Madras. 5.*)

ஸ்ரீ

# அருணோதயம்

✻

## முதல் காட்சி

இடம்: நாகசாமியின் வீடு

**பார்வதி:**—மைதிலி! நான் கோயிலுக்குப்போய் ப்ரதக்ஷணநமஸ்காரம் செய்துவிட்டு வருகிறேன். வீட்டைப் பார்த்துக்கொள்ளம்மா... [போகப்புறப்படல்]

**மைதிலி:**—அம்மாம்மா!...புஷ்பம் வாங்கிக்கட்டிவைத்திருக்கிறேனே, அதைக்கொண்டுபோய் சமர்ப்பித்துவிடும்மா...

[உள்ளே ஓடிப்போய் புஷ்பக்கூடையுடன் வருகிறாள்.]

இந்தாம்மா...

**பார்:**—உம்...நீ பகவானுக்கு மாலைகட்டி அன்புடன் சாத்தும் வேளை பகவானின் மனம்மகிழ்ந்து உனக்கு நல்ல மாலையைச் சூடி மகிழும் மணாளன் வந்து எங்கள் மனம் மகிழவேண்டும்...... [பெண்ணைப்பார்க்கிறாள்.]

**மைதிலி:**—ஏனம்மா சதா இதே கவலையாயிருக்கிறாய்? கடவுள் கடவுள் என்று நம்புகிறவர்களை அவர் கைவிடுவாராம்மா?நம்பபாட்டி அடிக்கடி ஒரு பாட்டுசொல்வாளே,

1. **நம்பிய ப்ரஹ்லாதனுக்கு ப்ரம்மமானார்.**
   **நம்பாத ஹிரண்யனுக்கு ஸிம்மமானார்.**
2. **நம்பிய விபீஷணர்க்கு ராமனானார்.**
   **நம்பாத ராவணனுக்கு எமனானார்.**
3. **நம்பிய பாண்டவர்கட்கு கிருஷ்ணனானார்.**
   **நம்பாத துர்யோதனனுக்கு துஷ்டனானார்.**
4. **நம்பிய பக்தர்களுக்கு நண்பனானார்.**
   **நம்பாத பித்தர்களுக்கு நமனானார்...**

என்று பாடுவாளே...அதை மறந்துவிட்டாயாம்மா?...

**பார்:**—என்னமோம்மா! இந்த காலத்துத் தாய்மார்களைப்போல் பெண்களை வைத்துக்கொண்டிருக்க என் மனம் வரவில்லை, காலாகாலத்தில் கல்யாணத்தைச் செய்துபார்க்க ஆசை தூண்டுகிறது. பாழும் பணமில்லாத சங்கடமல்லவா நம்மைச் சிறுமைப்படுத்துகிறது.

[கண்ணீர் விடுகிருள்.]

**மைதிலி:**—இதென்னம்மா, வருத்தப்படுகிருய்? நம்ம அத்தை அப்படி கைவிட்டுவிடமாட்டாள். ஜோஸ்யர்களெல்லாம் அப்பாவுக்கு த்ருப்திகரமாகத்தான் சொல்லி இருக்கிருர்களாம்:...

**குறிசொல்வேன், பச்சைகுத்துவேன்...**
**நான் சிவபெருமானின் செல்வக் குறத்தி...**
**வரம்பெத்த வரிசைக்குறத்தி...**
**குறிகேக்கலியோ! குறி!**

[இக் குரலைக்கேட்ட மைதிலி]

அம்மா!...அம்மா!...அதோ ஒரு குறத்தி வராம்மா... அவளைக் கூப்பிடட்டுமா!...ஏ குறத்தி!...

**குறத்தி:**—இதோ வந்தேன், ராஜாத்தி. (மைதிலியை ஏறஇறங்கப்பார்க்கிருள்) அடாடா..என்ன பார்வைஎன்ன பார்வை! (பார்வதியை உற்றுப் பார்க்கிருள்)...அம்மணீ! உன் மனசுலே பெரிய கவலை இருக்குது. அதனுலே தான் நீ இப்பிடி எளச்சு உருகித் துரும்பாபோயிட்டே அம்மணீ! கவலைப்படாதே...

**பார்:**—கவலைப்படாமல் என்ன செய்வதடீ குறத்தீ... என் கவலை தீருமா? ஒரு குறிசொல்லேன் பாக்கலாம், என் மனசுலே என்னகவலை இருக்கு? அதைத் தீர்ப்பாரா ஸ்வாமி...அதைப் பார்த்துச் சொல்லேன்...

**குறத்தி:**—இதோ பாக்கறேன்...ராஜாத்தீ !...எங்கே கையை நீட்டு...

[மைதிலியின் கையைப் பிடித்துப் பார்க்கிருள். முகத்தைப்பார்க்கிருள்.]

கண்ணா! ஏன் எளக்காரமாய்ப் பாக்கறே? இந்தக் குறத்தியை எண்ணனு பாத்தே? தெய்வ அருள் பெத்த தேவகுறத்தீ...நாங்க எப்படி எல்லாம் என்னென்ன செய்வோம் தெரியுமா?

பாட்டு

**கொழுங்கொடியின் விழுக் தவள்ளிக்**
**கிழங்கு கல்லி எடுப்போம்.**
**குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்**
**கொடியில்வைத்துத் தொடுப்போம்.**
**பழம்பிழிந்த கொழுஞ்சாறுந்**
**தேறலும்வாய்மடுப்போம்.**
**பசுந்தழையும் மரவுரியும்**
**இசைந்திடவே உடுப்போம்**
**செழுந்திணையும் நறுந்தேனும்**
**விருந்தருந்தக் கொடுப்போம்.**
**சினவேங்கைப் புலித்தோலின்**
**பாயலிற்கண் படுப்போம்.**
**எழுந்துகயற்கணிகாலில்**
**விழுந்துவினை கெடுப்போம்.**
**எங்கள்குறக் குடிக்கடுத்த**
**இயல்பிதுகாண் அம்மே...**

தாயே!...புரிஞ்சுதா?...இத்தனை வீராதிவீர சூராதி சூரக் குறத்தியான என் வாக்கு பொய்யே ஆகாது. நீ கவலையே படவேண்டாம்...ஆனல்...

**பார்:**—என்னடீ குறத்தீ! ஆனல்...என்று இழுக்கிருய்?...ஐயோ...சொல்லுடீ...

**மைதிலி:**—ஏ குறத்தீ! விஷயத்தை சட்டுபுட்டென்று சொல்லாமே ஏன் இப்பிடி உன் பெருமையை மட்டும்

சொல்லிக்கொண்டுபோறே? இதுவும் உங்கள் குலத் தொழிலோ...

குற:—(கடகடவென்று சிரிக்கிருள்) கண்ணுள ஆசையிலே என்ன படபடப்பாய் பேசரெம்மா...இதோ பாரு:

பாட்டு

**பேசுமென்குறி மோசமென்றிடில்**
**யார் சொலும் பரியாசமே!...**
**வாசமென் குழலாய் சவுந்தர**
**மாரர் வந்தணைவாரம்மே!......**

பயப்படாதே ராஜாத்தீ!... கட்டாயம் கண்ணுளமாகும். கொஞ்சம் நாள் தடைபட்டுத்தான் ஆவும் என்று எங்க சொக்கநாதக்கடவுள் சொல்கிருர்......

பார்:—ஏண்டியம்மா! இதென்ன குறிசொல்வது? பெண்ணுய்ப் பிறந்தால் தானே கல்யாணமாகிறது. இதையா உன்னைக்கேட்டேன்.

மைதிலி:—அம்மா! கர்ப்பவதியாயிருந்தால் கட்டாயம் பெண்ணே, பிள்ளையோ பிறந்தே தீரும்னு ஜோஸியர் சொல்றதுபோலிருக்கு இந்த குறத்தியின் வார்த்தை... போம்மா...அவளுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்தனுப்பு.

[பழம்புடவையும் ஒருரூபாயும் குறத்திக்குக்கொடுக்கிருள்.]

குறத்தி:—அம்மே!...நீ நெனச்சவனே வந்து கட்டிக்கப் போருன். பயப்படாதே! கண்ணுலத்துலே என்னே மறக்காமே புது பொடவை வாங்கிதரணும்.

[போகிருள்]

பார்:—உம்...ஏதோ நீ குறத்தியைக் கூப்பிட்டாயே என்று பேசாமலிருந்தேன். இந்த புடவையை பாத்திரக்காரனுக்குப் போட்டிருந்தா ஏதாவதொரு பாத்திரம் வந்

திருக்கும். தலைவிதியை மாத்த யாராலே முடியும்? குறத்தி யாவது குடுகுடுப்பாண்டியாவது! நான் கோயிலுக்குப் போய்வரேன், பத்திரமாயிரு. (போகிருள்)

(காட்சி முடிகிறது)

---

## 2-வது காட்சி

[ஸேதுராமனின் வீடு]

ஸேதுராமன்:—மீனுக்ஷீ! மீனுக்ஷீ! மணி மூணடிக்கப் போறது. இன்னும் காப்பிக்கு வழியைக் காணமே! தூங்குகிருயா என்ன? இந்தப்பாழும் காப்பியை அந்த டயத்துக்குக்கொட்டாவிட்டால் ஊஹூம்...மெஷின்வேலை செய்யவேமாட்டேனென்கிறதே, பெட்ரோல் இல்லாவிட்டால் கார் ஓடமாட்டேன் என்கிறதுபோல்...

மீனுக்ஷி:—காப்பி இல்லாவிட்டால் மூளைஓடமாட்டேன் என்று சத்யாக்ரகம் செய்கிறதாக்கும்! "காப்பிஇல்லாமல் தலை கழுத்துமேலே தங்கல்லையே...கழுத்துமேலே நிக்கலையே... காரியமும் ஓடலையே...என்று பாடுவதுதானே?"

ஸேது:—ஹிஹிஹி...பேஷ் மீனுக்ஷி! ஜோரா பாடுகிருயே! உனக்கு வயஸு ஆனுலும்கூட உன் பாட்டு அப்படியே இருக்குபோ...எங்கேஇன்னொருதரம்பாடு,கேக்கலாம்...காப்பி இல்லாமல் தலை...அப்பறம்...மூக்குமேலே ...சேச்சே...கழுத்துமேலே நிக்கலையே...(தானே பாடுகிருன்) எப்படி?...மீனு!...

மீனு:—எப்படியாவது?...இலுப்பக்காயாவது?...இப்படியே பாடியும் பேசியும் காலத்தைத் தள்ளினுல் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கல்யாணம் தானேநடந்துவிடும்! இல்லையா? இதோ பாருங்கோ! நம்ம சேகரன் மிகவும் அடக்கமான பையன்; புத்திசாலி; ஊர் பசங்களைப்போல்

போக்கிரிசாக்கிரி இல்லை. அதனால் காலாகாலத்தில் கல்யாணத்தை நாமேதேடிச்செய்துவைக்காமல் இப்படி....

சேஷ:—ஏதேது?...உனக்கிருக்கிற அக்கரை எனக்கும் உண்டு. நான் அதற்காக எத்தனை அலைகிறேன் தெரியுமா? இப்போதுகூட மகாதேவன் வரவைத்தான் எதிர்பார்க்கிறேன்.

மீனு:—என்ன! என்ன! மகாதேவனா? மலையை முழுங்குகிற மகாதேவனா? போதுமே வயிற்றெரிச்சல்! அவன் கல்யாணத்தரகனல்லவா? அவன் பார்த்தா பெண் கொண்டுவரப்போகிறான்? வெகு அழகாயிருக்கு! ஏன்? உங்களுக்கு சொந்தத்தில் பச்சைக்கிளிமாதிரி பெண் இருப்பது மறந்துவிட்டதா? கண் தெரியவில்லையா? என் தம்பியின் மகள் மைதிலி இருக்கையில் வேறு எந்த பெண் வேணும்ங்க்றேள்?

சேஷ:—ஓகோ! அத்தையம்மாள் சப்பைக்கட்டுக் கட்டிப்பேசவந்துவிட்டாயா! மைதிலிக்கு ஏற்ற ராமன் அயோத்தியில் வில்லோடே அம்போடே பிறந்திருப்பாண்டீ பிறந்திருப்பான்! நம்மசேகரனுக்கு அந்த லொட லொட்டை எல்லாம் வேண்டாம். பெண் பச்சைக்கிளியாட்டமா இருந்தால் அதற்கு வேண்டிய பணமெங்கேடீ? இதோ பாரு மீனாக்ஷி! உன் தம்பிபெண்ணாகட்டும் அண்ணன் பெண்ணாகட்டும், 5 ஆயிரம் ரூபாய் சொளைசொளையாய் வரக்ஷிணை எண்ணிவிடவேணும். பெண்ணுக்குக் குறைந்தது பத்தாயிரம் ரூபாயாவது நகைகள் இருக்க வேண்டும். சீர்வகையராக்கள் 5 ஆயிரத்திற்குக் குறையக் கூடாது. பையனுக்கு உடுப்புகள் வேஷ்டி சோமன்கள், மோதிரம், ரிஸ்டுவாச்சு, அதுஇது என்று அவன் சொந்தமாய் இஷ்டப்படி வாங்கிக்கொள்ள 5 ஆயிரம்ரூபாய்; நமக்குக் காலணா செலவில்லாமல் கூரை திருமங்கல்யம் முதலிய சகலமும் அவர்களுடையதாக இருக்கவேண்டும். இம்மாதிரி உன் தம்பி செய்வதானால் இப்போதே

கல்யாணத்தை நிச்சயம் செய்துவிடு. நான் வேண்டாமென்று சொல்லவில்லை.

மீனு:—பேஷ்! வெகு அழகு! நீங்கள் போடுகிற லிஸ்டைப் பார்த்தால் தேகத்தை உழைத்துக் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறவர்கள் செய்வதாகத்தோன்றவில்லை. ஏதோ! ப்ளாக்கு மார்க்கெட்டு, ரேஸ், கீஸ் என்கிறுர்களே அதில் பகல்கொள்ளையடித்த திடும்பணக்காரர்கள் தான் இப்படிச் செய்வார்கள். நீங்களும் பெண்ணை வைத்துக்கொண்டிருக்கிறீர்களே! அவளுக்கு அப்படி நீங்கள் செய்வீர்களா?...

ஸேது:—சிச்சி! அதிகப்ரஸங்கி! உன் பையனுக்கு அப்படி வருகிறதா இல்லையா பாருடீ: அஷ்டதரித்திரம் ஆத்தாள்: நித்ய தரித்திரம் தன் வீடு, என்பது போன்ற உன் தம்பி சம்மந்தமாம் சம்பந்தம்!...

மீனு:—ஆமாம்! ஆதியில் எங்கப்பா பெரிய உத்யோகத்திலிருக்கையில் உங்களுக்கு ஊர்ப்பட்டது கொட்டிக் கொடுத்துசெய்யவில்லையா? மக்கள்மனிதர்கள் ப்ரதானமா பணம் ப்ரதானமா! அவனுடைய சக்திக்குத்தகுந்தபடி செய்கிறுனும். ஏன் எனக்குக்கொடுத்த குடம் குத்துவிளக்கு கங்காளம் முதலியவைகள் என் தகப்பனுர் செய்துகொடுத்ததுதானே! அதையே திருப்பிப் பந்தலில் வைக்கிறேன்...

ஸேது:—சிச்சி! அசட்டுப் பிசட்டுனு உளருதே. இப்போ கல்யாணம் பண்ணிக்கப்போறது நானில்லை, உன் பிள்ளைஎன்பது நினைவிருக்கட்டும். சீருகொடுக்கருளாம்... இதோபாரு! இந்த வீட்டிலிருப்பதை ஏதாவதெடுத்து ஓசைப்படாமல் உன் தம்பிக்குக் கொடுத்தயோ, அதோடு கூடவே நீயும் கிளம்பி தம்பியிடமே போய்விடலாம். உங்கப்பா உனக்கு வைர அட்டிகை போடுவதாகக் கொடுத்த வாக்கைக் கூத்தாடிமாதிரி கூத்துலே பறக்க விட்டுவிட்டார். போனல்போறது என்று நான் பொறுமையாய் உன்னை இம்ஸை செய்யாமலிருக்கிறேன்...

மீனு:—போதும்...வாயை மூடிக்கொள்ளுங்கள்; என் தகப்பனுர் காலத்தில் அவருக்கு வைர அட்டிகைபோடச் சக்தியில்லாமல் போகவில்லை. நீங்கள் ஏதோ பெரிய படிப்பு படித்துவிட்டு ப்ரமாதவேலை பார்க்கப்போவதாக ஒரு ஆசைகாட்டி உங்கப்பா ஏமாத்தினதை மறந்துவிட்டீர்களா! சாதாரண உத்யோகஸ்தன் மனைவிக்கு வைர அட்டிகைதான் ஒன்று குறைவாக்கும். அதனுல்தான் போடவில்லை; இப்போது அதைப்பற்றி என்ன?

ஸேது:—தே! ஏதேது, வாய் அனுமார் வால்போல் நீளமாய் வளர்ந்துவிட்டது? இந்த அழகான பிறந்தாத்திற்குப் பரிசல் வேறு பரிசல்!...நீ என்ன சொன்னுலும் நான் உன் தம்பி மகளை பணமில்லாமல் கல்யாணம் பண்ண மாட்டேன்; தெரிஞ்சுதா? ஆயிரமாயிரமாய் பணத்துடன் வருவதற்குப் பெண்கள் காத்திருக்கையில், 'தக்கா! தையா?' என்று கூத்தாடும் உன் தம்பியின் மகளை யார் லக்ஷயம் செய்வார்?..."ஓ மகாதேவனு!...தே...உள்ளே போடீ!...வாருங்கோ! வாருங்கோ! உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன். இப்படி உக்காருங்கோ....அம்மா இந்திரா! சுடச்சுட காப்பி கொண்டுவாம்மா! ஊம்... போனகாரியம் எப்படி?...

(இந்திரா கொதிக்கக்கொதிக்க காப்பியைக் கொண்டு வந்து தரகன் கையில் கொடுத்து அவனை ஏளனமாயும் அலக்ஷியமாயும் பார்க்கிருள். காப்பியை வாங்கிய தரகன் சூடு தாளாது லபோதிபோ என்று அடித்துக்கொண்டு கீழே கொட்டிவிடுகிருன். இந்திரா சிரித்தபடி நிற்கிருள்)

ஸேது:—என்ன அம்மா இந்திரா! இப்படியா தென்னுலி ராமன் பூனைக்குப் பால்வைத்ததுபோல் கொண்டுவருவது?

இந்:—நீங்க தானேப்பா சுடச்சுட காப்பி கொண்டுவா என்று உத்திரவிட்டீர்கள்? ப்ரோக்கர் மாமா!...

மகா:—ஏய்! இன்னொரு தரம் அப்படிக் கூப்பிட்டால் எனக்குக் கெட்டகோபம்!வரும்தெரியுமா!...ப்ரோக்கராவது ப்ரோக்கர்?...கல்யாணமாமான்னு கூப்பிடு. தெரிஞ்சுதா?...

இந்திரா:—ஆகா! அப்படியே கல்யாணமாமான்னு கூப்பிடுகிறேன்.

ஸேது:—இந்திரா! பெரியவாளை அப்படிஎல்லாம் மரியாதை இல்லாமே பேசாதே; இன்னொரு கப் காப்பி கொண்டுகொடு. தாம்பூலப்பெட்டியையுங் கொண்டுவா...

[இந்திரா உள்ளேபோய் காப்பியுடன் வருகிறாள்.
சமயல்காரி தாம்பூலப்பெட்டியுடன்வருகிறாள்.]

லக்ஷ்மி:—கல்யாணமாமா! இதோ தாம்பூலம்..எனக்குக் கூட ஒரு பிள்ளை இருக்கிறான். அவன் கரண்டி ஆபீஸில் கலெக்டர்வேலை பார்க்கிறான். அவனுக்கு ஒரு பெண் தேவை...

மகா:—மூஞ்சியைப்பாரு! பொங்கரவனுக்கெல்லாம் பெண்வேட்டையாடும் அல்பன் நானில்லே!போ! உள்ளே!.. என்ன ஸேதுராமய்யர்வாள்! சமயல்காரிக்கு இத்தனை இடங்குடுப்பதா?...

ஸேது:—லக்ஷ்மீ! உள்ளே போ! மரியாதை இல்லாமல் இப்படிப் பேசாதே...மகாதேவரே! அந்த லக்ஷாதிபதியின் பெண்ணைப்பற்றிச் சொல்லுங்கோ...

[லக்ஷ்மி போகிறாள்]

மகா:—அதான் சகல ஏற்பாடும் ஆய்விட்டதே. இன்று சாயங்காலமே நீங்கள் பிள்ளையாண்டான சகிதம் வந்து பார்க்கும்படிச் சொன்னார்கள். உங்கள் கையில் 5 ஆயிரம் ரொக்கமாய்க் கொடுத்துவிடுகிறார்களாம்.

ஸேது:—ஆஹா!...அப்படியா! பேஷ் பேஷ்! அதில் வெள்ளிசா 500 ரூபாய் முதலில் உமக்கே கொடுத்து நமஸ்காரம் பண்ணுகிறேன் (நமஸ்காரம்செய்துகாட்டல்)

மகா:—அடாடாடா...இதென்ன செய்கை? எழுந்திருங்கோன்னா! நீங்க என்ன, கொடுக்காத கர்மியா? மனஸு வெச்சா ஆயிரங்கூடக் கொடுத்துவிடுவீர்களே. எனக்குத் தெரியாதா?

ஸேது:—ஆமாமாம்...கட்டாயம் ஆயிரம் ரூபாயை அப்படியே கொடுத்துவிடுகிறேன். சரி! நான் அத்தகைய இடத்திற்கு வருவதென்றால் சரியானபடி மரியாதையாய் வரவேணும் பாருங்கள்.

மகா:—இல்லையோ பின்னே! நான் என்ன, விஷயம் தெரியாதவனா? வரும்போதே ரெண்டு டாஸ்கி...

ஸேது:—என்ன...டாஸ்கியா?...

மகா:—ஹி! ஹி!...அதிக சந்தோஷத்துலே குளறிப் போயிடுத்து. டாக்ஸிகாரரை சரியாய் 5-35க்கு வாசலில் கொண்டு நிறுத்தச்சொல்லி இருக்கிறேன். சரி...நான் வரட்டுமா?...

ஸேது:—சரி, அங்கே தானே இருப்பீர்கள்?

மகா:—கேக்கணுமா? அங்கேயே தானிருப்பேன்...சரி, 5-35க்கு கிளம்பிடுங்கள். அவா நாகரீகமனுஷ்யாள் ஷோக்கா ட்ரஸ் பண்ணிண்டு வாருங்கோ...

சர்மா:—ஆஹா! அப்படியே.

மகா:—(நாலடிசென்று திரும்பிவந்து,) சர்மாவாள்! பையனுக்கு புஷ்கோட்டு பேண்டு எல்லாம்போட்டு ஜம்னு அழைத்துக்கொண்டுவாருங்கோ...

சர்மா:—சொல்லணுமா?

மகா:—(போய் திரும்பிவந்து)ஆத்தில் மாமியைக்கூட ஜோரா...அப்டீ...வரச்சொல்லுங்கோ.

சர்மா:—அடாடா! கேக்கணுமா...அப்படியேசொல்றேன் ஸார்! ஜோரா வந்துவிடுகிறோம்.

[தரகன் வெளியே வருகிறான்; சமையல்காரி எதிரே வருகிறாள்.]

சமை:—கல்யாணமாமா! பொங்கரபையனுக்குபெண் பார்க்காவிட்டால் போகிறது...எனக்கொரு பெண் இருக்கிறாள். பத்துவயசு ஆயிடுத்து...

மகா:—சேச்சே...தூரப்போ!... வழிமறிச்சான் சாமியாட்டம். குறுக்கே நிக்கரா...போ...போ... [போகிறான்]

லக்ஷ்:—அடேயப்பா! வழிமறிச்சான் சாமியாமே!... இவர்...வழிமறிச்சான்சாமி!...இந்த தரகன் இல்லாவிட்டால் என்பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கல்யாணமாகாதோ!

[போகிறாள்.]

காட்சி முடிகிறது.

---

## 3-வது காட்சி

இடம் : ஸேதுராமய்யர் வீடு.

ஸேது:—இந்திரா!...சேகர்!...எல்லோரும் ரெடிதானா? (கைக்கடியாரத்தைப்பார்த்து)சரியாய் மணி 5-34ஆகிறது, டாக்ஸிக்காரன் வந்துவிடுவான். ஏ மீனாக்ஷீ! இதோ பாரு கர்னாடகமாய் ட்ரெஸ் பண்ணிக்காதே. இந்த காலத்தை அனுஸரித்து மாம்பழக்கட்டுகட்டிண்டிண்டுவா! ஜோரான ஸில்க்கு ஸாரி இந்திராவுடையது ஆறுகஜம் இருக்குபாரு அதைக் கட்டிண்டுவா...

[போய் ட்ரெஸ் செய்துகொண்டு வருகிறார்.]

[மீனாக்ஷி பெரியகரைப்புடவை மடிசார்வைத்துக் கட்டிக்கொண்டு தலைபின்னி எடுத்துக்கட்டுடன் வருகிறாள்.]

ஸேது:—ஐயையோ! இதென்ன காட்டுமிராண்டி வேஷம்? ஒன்னெபாத்தவுடனே பலேநாகரீகமான சம்மந்தியும் அந்த பெண்ணும் பயந்துவிடப்போகிறார்களே! அதுமட்டுமா? சிரிசிரின்னு சிரிப்பா?...

மீனாக்ஷி:—போருமே சவரணை' ஜாதி வழக்கத்தையும் விட்டுவிட்டு பிள்ளைக்கு பெண் தேடணமாக்கும். இந்தக் கால நாகரீகம் எனக்குவேண்டாம்; ரிஷபத்வஜதீக்ஷிதர் வயித்திலே பொறந்து சங்கரநாராயண தீக்ஷிதர் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு என் மகன் கல்யாணத்துலே நான் முன்கொசவான் கட்டின ஊர்சிரிக்கும். மாம்பழக் கட்டாம்! வெங்காயக்கட்டாம்! வரதக்ஷிணையின் ஆசை ஜாதி ஆசாரத்தைக்கூட தள்ளச் சொல்றதாக்கும்...

[முகத்தைத் திருப்புகிறாள்.]

[இந்திராவும் சேகரனும் ஜோராக ட்ரெஸ் பண்ணிக் கொண்டு வருகிறார்கள். அவர்களைப்பார்த்து ஸேது ராமன் பூரித்துப் பல்லை இளிக்கிறார்.]

ஸேது:—பேஷ்! சபாஷ்! மன்மதக்குஞ்சுமாதிரி இருக்கிறாய். பலே! இந்திரா! ரதின்னா ரதிதான்...என்பாக்யமே பாக்யம் ஆசைக்கு ஒரு பொண்ணும் ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும் பகவான் கொடுத்தாலும் பொறுக்கிஎடுத்த மாணிக்கமாய் கொடுத்திருக்கிறார்!

[த்ருஷ்டிகழித்து கன்னத்தில் சுடுக்குகிறார்]

மீனா:—"வாழ்ந்தாளாம் சேஷி வறத்தாளாம் ஓட்டை வெச்சு. ஓடு ஒடைஞ்சுபோச்சுன்னு ஒக்காண்டு அழுதாளாம்"ன்னு ஒருபழமொழி உண்டு. ஆஸ்திக்குப் பிள்ளையாம். எந்த குபேரப் பட்டணத்தை புள்ளைக்கு வாங்கி வைத்திருக்கிறது? ஆஸ்தி என்றதைமாத்தி அஸ்தின்னு சொல்லுங்கோ...

**ஸேது:**—சீச்சீ! அபசகுனியாட்டம் பேசரே...அஸ்தி யாம் அஸ்தி! இப்போ பாரடி தெரியும். 5 ஆயிரம் ரூபாய் நம் சேகர் கையில் சொளேசொளேயா எண்ணப்போகிருர் களே. பெரிய பணக்காரசம்மந்தம்; பஸ்டுக்ளாஸில் M. A. பாஸ்செய்தபெண்ணு; இன்னும் என்னடீ வேணும்?......

**சேகர்:**—அப்பா! நீங்கள் இப்படி எல்லாம் சொல்வது எனக்குப் பிடிக்கவே இல்லே. அல்நாஸ்கர் கதை மாதிரி என்ன வேண்டிக்கிடக்கு?... இந்த வரதக்ஷிணையே எனக்கு கட்டோடு சகிக்கலே...

**ஸேது:**—பேசாமலிருடா அசடே! அந்த காலத்துலே நான்தான் ஏமாந்தேன். இப்ப ஏண்டா நீ ஏமாறணும்?... (மணியைப் பார்க்கிருர்) அடெடெ...மணி 5-50கூட ஆயிடுத்தே...இன்னும் டாக்ஸிக்காரன் வரலேயே...அட ராகவா...!

[அப்படியும் இப்படியும் உலாவுகிருர்]

**இந்:**—அப்பா! தரகன்வார்த்தையை நம்பினீங் களோன்னே! அதன் பலன் இது. அவா பெரிய நாகரிகக் காரான்னு வேறே சொல்றேள். நீங்கள் கணக்கா அந்த நிமிஷத்துக்குப் போகலேன்ன அவா வெளியேதான் போயிடுவா: மணியே பாத்து ப்ரயோசனமென்னப்பா?... அண்ணு! விடுவிடென்னு நடராஜாஸர்விஸில் நடந்து போகலாமா?...

**சேகர்:**—பேஷாய்ப் போகலாம்!

**ஸேது.**—சீச்சீ! சமயாசமயம் தெரியாமல் விளேயாடு கிருயா?...பேசாமலிரு...ஒங்கம்மா அபசகுனிபோல் பேசின ளோன்னே, அதன்பலன் இது; (எட்டிப்பார்ப்பது) தூரத் தில்வரும் குப்பைலாரியைப் பார்த்து டாக்ஸிகாரனே?

**இந்:**—அப்பா...அதுவும் ஒரு கார்தான், குப்பை வண்டிலாரிப்பா ... [எல்லோரும் சிரித்தல்]

**சேகர்:**—அப்பா!...ப்பா...அதோ ஒரு மூட்டைலாரி காலியாபோகிறதே; அதில் போனால் வரும்போது லாரியிலேயே பணத்தைக் கூடபோட்டுண்டு வந்துடலாமே!

[கண்ணைச்சிமிட்டுகிறான்]

[ஸேதுராமசர்மா கோபத்துடன் இப்படியும் அப்படியும் பார்த்துப் பல்லைக் கடிக்கிறார்.]

**சர்மா:**—அதிகப்ரஸங்கித்தனமாகப் பேசினால் கோபம் வரும்...

**இந்:**—கோபந்தான்வந்திருக்கேப்பா! இன்னும்பெரிசா... ஓகோ...வரதக்ஷிணை அவ்வளவு பெரிசாவருமா?

[கண்ணைச்சிமிட்டுகிறாள்]

**சர்மா**——(இந்திராவை அடிக்க ஓடிவருகிறார். டாக்ஸி கார் வந்துவிடுகிறதுகண்டு கோபம் மாறிச் சந்தோஷம் வந்துவிடுகிறது) அதோ! கார்வந்துவிட்டது...என்னப்பா அரைமணி லேட்டாக்கிவிட்டாய்? இப்படியா வருவா?... உம்...போய் ஏறுங்கோ...சேகர்! முன்ஸீட்டில் ஜோரா உட்காரு...

**இந்:**—அப்பாப்பா! நீங்கள் முன்ஸீட்டில் ஜோரா உட்காருங்கள். அப்போதான் மதிப்பா வரதக்ஷிணை மூட்டையைஉங்கள்கையில்கொடுப்பா...(என்று சொல்லிக் கொண்டே ஓடிவிடுகிறாள். எல்லோரும் போகிறார்கள்.)

காட்சி முடிகிறது

---

## 4-வது காட்சி

இடம்: M. A. மாணவியான ஸரளாவின் வீடு.

**சங்கர்:**—ஓய் ப்ரோகரே! மணி ஆறேகால் கூட ஆய் விட்டது. இன்னும் பேர்வழிகளைக் காணவில்லை. இது

தான் பெரிய நாகரிக மனிதர்களோ?...என் வேலைஎல்லாம் கெட்டுப்போகிறதுங்காணும்...

ஸரளா:—[தடபுடல் அலங்காரமாக தலை பாப் பண்ண மாதிரிவாரிக்கொண்டு உதட்டில் சாயத்தைப் பூசியபடியே] ஏம்பா! சுத்த கண்ட்ரீப்ரூட்டா என்ன? பங்க்சுவாலிடியே இல்லாத காட்டுமிராண்டியாயிருந்தா என்னசெய்வதப்பா? சொன்ன மணிக்கு கரெக்ட்டா வரவேண்டாமா?...

உமா:—நான்ஸென்ஸா இருக்கே.?...நான்சரியா6-30க்கு ஒருப்ரெண்டை மீட்பண்றதாகச் சொல்லி இருந்தேன். இங்கேயே அந்தடயம் ஆய்விடும்போலிருக்கே, என்னங் காணும் ஆடுதிருடிய கள்ளனாட்டும் முழிக்கிறீர்? ஸரளா!... நாம்வெளியே போகலாம்; வருகிறவா வேணும்னு மறுபடி யும் நாளைக்குவரட்டும்.

மகா:—(பல்லை இளித்துப் பயந்து நடுங்கியபடி) அம்மா !கோபிக்கக்கூடாது. வழியிலே காருக்கு ஏதாவது ரிப்பேர் கிப்பேர் வந்திருக்குமோ என்னமோ?...நாளைக்கு சனிக்கிழமை பாருங்கோ...அது ஆகாதே.

ஸரளா:-ஷட்டப்..ஆகாதாவது போகாதாவது! எந்த கிழமையானு என்னங்காணும்! சுத்த நாட்டுப்புறமாய் பேசுகிறீர்! கிழமையில்தான் எல்லாம் இருக்கிறதோ! (கண்ணாடி பார்த்து முகத்திற்குப் பவுடர் பூசியபடி) அம்மா!...கமான்...அப்பா! வாட் டு யூ ஸே...

சங்க:—நானும் அதான் திங்க் பண்றேன்..காராவது கெட்டுப்போறதாவது. அப்படிப்பட்ட ஓட்டைக்காரைத் தான் வைத்துக்கொண்டுவருவார்களா?...

மகா:—சேச்சே...அவர்களைப்பார்த்தால்தானே தெரி யும். நான் சொல்றது நம்பிக்கை இல்லே...அதோ! கார் ஓசைகேக்கிறதே!

(எல்லோரும் பரபரப்புடன் போகிறார்கள்)

சங்கர்:—வாங்கோ! வாங்கோ! என்ன இத்தனை நாழி லேட்டாயிடுத்தே...

சர்மா:—அந்த...டாக்ஸிகார்...

மகா:—அதான்! அதான்!..சொந்தக்கார் ரிப்பேர் ஆயி டுத்து. அதான் டாக்ஸி வைத்துக்கொண்டுவந்தார்,
(கண்ணைக் காட்டுகிறார். சர்மா புரிந்துகொண்டு,)

சர்மா:—ஆமான்னுக்கா...பாதிவழியிலே பங்க்சர் ஆயி டுத்துன்னு நிறுத்திப்புட்டு ஏதோ சரிப்பண்ணிண்டு வந் தோம், மன்னிக்கணும்.

ஸரளா:—கமான்...ப்ளீஸ் ஸிட்டௌன்...... இவர்தான் கல்யாணப்பிள்ளையா...ஓ! வெரி நைட்...

உமா:—வாருங்கள். இப்பிடி உட்காருங்கள்.
[மீனாட்சி கூடஉட்கார வெட்கிப்பதுங்கிநிற்கிறாள். அதைப்பார்த்து தாயும் மகளும் சிரிக்கிறார்கள். இந்திராமட்டும் உட்காருகிறாள்.]

மீனா:—எனக்கு இப்படி எல்லாம் புருஷர்களுடன் உட் கார்ந்து பழக்கமில்லே...நாம் உள்ளே போகலாமே...

சர்மா:—மீனாட்சி! இப்படி வந்துஉட்காரு; உன் கர்நாட கத்தை விடமாட்டேங்க்ரயே! வா...

[மீனாட்சி நாணிக்கோணிவந்து உட்கார்ந்து வெட்கத்தினால் நெளிகிறாள். சர்மா பல்லைக்கடித்துக் கோபிக்கிறார்.]

ஸரளா:—பட்ளர்! காப்பி டிப்பன் கொண்டுவா!...

[பட்ளர் கொண்டு மேஜைமீது வைக்கிறான். உடனே சர்மா தின்ன ஆரம்பித்துவிடுகிறார்; உமா முதலியவர்கள் சிரிக்கிறார்கள்.]

சர்மா:—(டிப்பனைக்கடித்துசாப்பிட்டபடியே)...எனக்கு ரொம்ப சந்தோஷம் ஸார்! இந்த சம்மந்தத்தைப்பற்றி (மறுபடி ஒரு துண்டு வாயில் போட்டுக்கொள்வது) இவர் சொன்ன உடனேயே எனக்கு—ஏன் எங்கள் எல்லோருக்கும்—ரொம்ப பிடித்துவிட்டது...மீனாட்சி! சாப்பிடு. சேகர்! இதென்ன ப்ரீயா ஸோஷலா மூவ்பண்ணவாண்டாமா! உம்...இந்திரா! சாப்பிடம்மா...(மறுபடியும் வாயில்போட்டுக்கொண்டு அவசர அவசரமாகத் தின்பது.)

மகா:—(தானும் சாப்பிட்டபடி) இவாளைப்பத்தி நான் அதிகம் சொல்லவே வேண்டாம்.

சங்கர்:—ஆமாமாம். சொல்லாமலேயே நன்ருகத் தெரிகிறதே. வெகு ரஸிகர்....வெகுரஸிகர்!

உமா:—ஏம்மா! சாப்பிடமாட்டீர்களா! ஆசாரமா செய்ததோ இல்லையோ என்று சந்தேகமா?...எங்கள் பட்ளர் ஹரிஜன் இல்லை, மலையாளத்து நாயர்தான். வெகு நன்ருக செய்வான். கைதேர்ந்த பேர்வழி.

(மீனாட்சி விழிக்கிருள். கையில் எடுத்ததையும் போட்டுவிட்டு, பெண்ணை சாப்பிடவேண்டாமென்று சமிக்ஞை செய்கிருள்.)

ஸரளா:—மிஸ்டர் சேகர்! நீங்கள் F. C. S. க்குத்தானே இப்போது படிக்கிறீர்கள்?

மகா:—சேச்சே....அதெல்லாம் இல்லே...இவர் B. A. பாஸ் செய்துவிட்டார்...

ஸரளா:—(சடக்கென்று நாற்காலியை விட்டெழுந்து) என்ன! வெறும் B. A. யா?...ஆர்டினரி B. A.யா?...பூ!... அப்பா! பேஷான வரந்தான். M. A. முதல் வகுப்பில் பாஸ்செய்துள்ள எனக்கு ஒரு ஆர்டினரி பி. ஏ. ஷயக்

கொண்டுவந்திருப்பது வெகு அழகு! இந்த வரன் எனக்கு வேண்டாம். போகச்சொல்லலாம்...

(பந்தாட்டமட்டையைத் தூக்கிக்கொண்டு முடுக்காகப் போகிறாள்.)

சங்கர்:—ஏய் புரோக்கர்! உமக்கு ஸென்ஸில்லை? எம்.ஏ. பாஸ்செய்த ஒரு பெண்ணுக்கு பி. ஏ. யைக் கொண்டு வருகிறீரே. அவள் முகமெடுத்துப் பார்ப்பாளா?...ஆமாம், ஸாரி; ஸார்! நீங்கள் போய்வரலாம். (உள்ளே போகிறான்.)

சர்மா:—(பேந்தப்பேந்த விழித்தவாறு புரோக்கரைப் பார்த்து) ஓய்!...என்னங்காணும் விளையாடுகிறீர்?

சேகர்:—அப்பா! முதலில் வீட்டிற்குப் போகலாம். பிறகு அந்த மடையனுக்குச் சரியானபடிசெய்யலாம். அவமானம் அவமானம்! (எல்லோரும் போகிறார்கள்.)

காட்சி முடிகிறது

### 5-வது காட்சி

இடம்: நாகசாமி வீடு.

பார்வதி:—போனகாரியம் என்னவாயிற்று? ஏதாவது உபயோகம்உண்டா? வரதட்சிணை பிசாசுஅங்கும் வந்திருக்கிறதா?...

நாகஸாமி:—உம்! காற்றும் வெளிச்சமும்கூட ஓரிடத்தில் நுழையாமல் தடைகட்டி வைக்கலாம். வரதட்சிணை பிசாசைத் தடைகட்ட யாரால் முடியும்? 5 வேணுமாம். "பெண்ணுக்கு பாட்டுத் தெரியுமா, நாட்டியம் தெரியுமா, என்ன படிக்கிறாள்?" என்று கேள்விகள் வேறு அடுக்கடுக்காய் கேட்கிறார்கள்.

பார்:—உம்...பாட்டும், படிப்புமாவது தெரியாதிருக்கலாம். நாட்டியம்கூடத் தெரியாத பெண்கள் உண்டா? மைதிலி பஸ்டுக்ளாஸாக ஆடி தங்கமெடல்கூட வாங்கி இருக்கிருளே, அதைச் சொன்னங்களா?...

நாக:—வேறு உத்யோகம் என்ன இருக்கிறது; எல்லாம் சொன்னேன். சொன்னதன் பலன் பெண்ணைப் பார்க்க இன்றே வருகிருர்களாம். நாட்டியம் பார்க்க வேண்டுமாம்...

(மைதிலி இதைக் கேட்டுக்கொண்டு வருகிருள் முகத்தைச் சுளித்துக்கொண்டு,)

மைதிலி:—அப்பா! நான் இப்பவே சொல்லிவிடுகிறேன். கல்யாணம் என்று ஒரு வ்யாஜத்தை வைத்துக்கொண்டு கண்டவர்களும் வந்து உட்காருவதும் தாம்பூலத்திற்குச் செலவு வைத்து உங்களுக்கும் பணச்செலவு வைப்பதும் என்னையும் ஆடச்செய்து வேடிக்கைப் பார்ப்பதும் பிறகு வரதட்சிணைப்பிசாசு பிடித்தவர்கள் தமது பல்லவியைப் பாடத்தொடங்குவதும் எனக்கு அடியோடு பிடிக்கவில்லை. நான் இனி இம்மாதிரி ஆடமாட்டேன். நீங்கள் கோபித்துக்கொண்டாலும் சரிப்பா; நான் ஆடவும் மாட்டேன், பாடவும் மாட்டேன். ஏன்?...எதிரிலேகூட வரமாட்டேன். இதென்ன கண்காட்சிச்சாலையா?. . . எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலேப்பா!

பார்:—மைதிலி சொல்றதுரொம்ப சரியானவார்த்தை. மைதிலீ! இத்தனை புத்திசாலித்தனமும் அழகும் பகவான் உனக்குக் கொடுத்திருக்கிருரே, அதற்கேற்ற அதிர்ஷ்டத்தை ஏனே கொடுக்கவில்லையே...

நாக:—போதும் பார்வதீ! இப்படி எல்லாம் பேசாதே. நம் குழந்தைக்கு மனம்நோகும்படிப்பேசினல் அவள் வருத்தப்படுவாள். பாரு, மைதிலீ! நீ சொல்றது ரொம்ப சரி என்று எனக்கும் தெரிகிறது. என்னம்மா செய்வேன்?

உற்ருரா! பெற்ருரா என்று சொல்வார்கள். உன்னுடைய அத்தை இந்த விஷயத்தில் இப்படி இருப்பாள் என்று நான் நினைக்கவே இல்லை. பணமல்லவா உறவையும் சிநேக பாசத்தையும் வேரறுக்கிறது. வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்யிக்கு அழுகிறமாதிரிதானே என் கதி இருக்கிறது. என்ன உறவு வேண்டிக்கிடக்கு?...

பார்:—அக்கா என்ன செய்வார்? அவர்மீது குற்றமே இல்லை. மைதிலியின்மீது அவருக்கு எத்தனையோ ஆசைதான். பெண்களுடைய கடமைப்படி கணவனுக்கு அடங்கித்தானே அவர் நடக்கவேண்டும். உங்க அத்திம்பேர் ஒரேபிடிவாதமாய் பணம் பணமென்று பறக்கிருராம். வரதட்சிணை வரும் பெண்ணைத்தான் மணம் செய்யப்போகிருராம். நமக்குத் தகுந்த வரன் கிடைக்காமலாபோகும்.?

மைதி:—அம்மா! நானும் பிரதி தினமும் பார்க்கிறேன், நீங்கள் இருவரும் சதா என் கல்யாண விஷயமாகவே கவலைப்பட்டு உடம்பு மெலிந்துபோகிறீர்கள். நமக்குள்ள கால்வயிறு கஞ்சிக்கான நிலத்தையும் விற்றுவிட அப்பா துணிந்துவிட்டார். இதை நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். உலகத்தில் பல குடும்பங்களில் செய்வது போல் என்னையும் படிக்கவைத்துவிடுங்கள். நான் படித்து என் காலால் நான் நின்று உங்களையும் காப்பாற்றுகிறேன். இனி வீணன யோசனையும் கவலையும் வேண்டாம். எதிர் வீட்டு டீச்சரம்மாளிடம் நான் இப்போதேபோய் சொல்லி எப்படியாவது என்னை சம்பளமில்லாமல் சேர்த்துக்கொள் ளும்படி வேண்டுகிறேன். எத்தனைபேர்கள் படித்து முன் னுக்கு வரவில்லை. நான்மட்டும் ஏன் வரக்கூடாது? நான் போகிறேன். (ஓடமுயலுகிருள்)

நாக:—மைதிலீ! மைதிலீ! இங்குவா! அவசரப்பட்டுப் போகாதே. கடைசியாக நான் என்ன தீர்மானித்திருக் கிறேன் என்ருல், நான் நேரே அக்காவாத்துக்குப்போய்

அவர்களைக் கண்டிப்பாகக் கேட்டுவிடுகிறேன். அதற்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்த்துவிடுகிறேன். இன்று இரவு வண்டிக்கே போகலாம். பார்வதி! நீயும் வருகிறாயா?

பார்:—நான் வரவில்லை. நீங்கள் மைதிலியை வேண்டுமானால் அழைத்துப்போங்கள். அவளுக்கு அதிர்ஷ்டமிருந்தால் கடவுள் கிருபைசெய்யட்டும்.

நாக:—பார்வதி! பிரயாணத்திற்குத் தயார்பண்ணு. இதுதான் கடைசிதரம். இப்போதும் அவர்கள் அலட்சியம் செய்துவிட்டால் இனி உறவையே விட்டுவிடுகிறேன். பணத்துடனேயே அவர்கள் வாழட்டும்.

[காட்சி முடிகிறது]

## 6-வது காட்சி

### இடம்: ஸேதுராமன் வீடு.

(ஸேதுராமன், பத்ரிகை படிக்கிறார்; கடன்காரன் முடுக்காக வந்து பேசுகிறான்.)

கடன்காரன்:—ஏன் சார்! உலகத்தில் நாணயம் என்பது உம்மிடந்தான் கற்றுக்கொள்ளவேண்டும். பெரிய மனுஷனும், படிச்ச மனுஷ்யனும். என்ன வ்யாபாரமய்யா இது? எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஏதோ ஒரு தவணை இரண்டு தவணை வைப்பது உண்டு. இப்படியா என்காலை ஒடித்து உம்முடைய ஆயுள் பூராவும் தவணையேவைத்து ஏமாற்றுவது? இதென்ன யோக்யதையய்யா?

ஸேது:—ஹி...ஹி...ஹி...வாருங்கள். இப்பிடி உட்காருங்கள்...கோபித்துவிட்டால் என்ன செய்வது?...அடிக்கும் ஆனை சறக்குமோன்னே...அப்படி....

கடன்:— அப்படி...அடிக்கு ஆனை தலை கீழாய் சறுக்கி விட்டது!...உம்முடைய நாணயத்தைப்போல்...

சேது:—ஹி! ஹி...ஏதோ அவஸரத்திலே கொளறி விட்டேன்...இதோ பாருங்கோ, நீங்க அலையவே வேண்டாம். நான் கட்டாயம் பணத்தைக் கொடுத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேங்க்ர வார்த்தையை இப்பவும் சொல்றேன்.

கடன்:—ஆமாம்! சொல்லாமெ என்ன? உம்மைப் போலே புண்ணியவான் புளியங்கொட்டை நட்டானும். அதுபோல் நீர் இலுப்பக்கொட்டை நடப்போகிறீரோ?

சர்மா:—சேச்சே! அப்படி என்னை அநியாய மோசக்காரனு நெனைச்சுடாதிங்காணும்..என் பையனுக்கு அனேகமாய் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. நிச்சயதார்த்தத்தன்று 10 ஆயிரம் ரூபாய் சொளைசொளையாய் எண்ணிவிடுவதாக வார்த்தை. அதை வாங்கியதும் உடனே உம்முடைய கடனைப் பூராவும் வட்டியுடன் தீர்த்துவிட்டு நான் வீட்டுக்கு வருவேன் தெரியுமா? அப்படியெல்லாம் நான் அல்கா மனுஷ்யன் இல்லேங்காணும்.

கடன்:–அடக்ரகசாரமே..அல்கா மனுஷ்யன்னு உம்மை யார் சொன்னுர்கள்? நீர் வெகுநாணயமாய் பெண் வீட்டாரைக் கொள்ளையடித்துக் கடனைத்தீர்க்கும் அபாரசாமர்த்யம் படைத்த உத்தம சிகாமணியல்லவா? சிகாமணீ... தூத்தூ....பெண்வீட்டாரிடம் வரதக்ஷிணையாம், போரதக்ஷிணையாம்...வரதக்ஷிணையை வாங்கிக் கடனை அடைக்கிறதாகச் சொல்வதற்கு வெட்கமாயில்லே! இதைவிடப் புளியங்கொட்டை நட்டவனை யோக்யனுக்கிவிட்டீரே! நீர் என்னங்காணும் செய்வீர்! அவசரம் அவசரம்னு அடித்துக்கொண்டு கடன் வாங்கியபோது இருந்த அறிவும் துடிப்பும் இப்போது இருக்கவேண்டாமான்னு கேக்கறேன்!

[உள்ளிருந்து இந்திரா இதைக் கேட்டு முகம் சுருங்கி தன் தாயாரை அழைத்துவந்துமறைமுகமாகக் காட்டி இருவரும் வருந்துகிறுர்கள்.]

**சர்மா:**—ஓய்! நீர் அனுவச்யமாய்ப் பேசவேண்டாம். தயவுசெய்து பொறுத்துக்கொண்டால் நாணயமாய் வரதக்ஷிணையை வாங்கிக் கடனைத் தீர்த்துவிடுகிறேன்... இல்லாவிட்டால்....

**கடன்:**—மஞ்சள் கடிதத்தை நீட்டிவிடுவீரோ?... ஓய்! மரியாதைக்காகவும், ஐயோ பாவம் என்கிற பச்சாத்தாபத்திற்காகவும் நான் இத்தனை நாள் பார்த்தேன். இனிமேல் நான் சும்மா இருக்கமாட்டேன். உம்முடைய ஆபீஸில் வந்து மானத்தை வாங்கிவிட்டு மறுகாரியம் செய்வேன், தெரியுமா? நீர் என்னை என்னவென்று நினைத்தீர்? யோக்யனுக்குயோக்யன் அயோக்யனுக்கு அவனையும் மிஞ்சிய அயோக்யனுகிவிடுவேன்...

[இந்திராவின் முகத்தில் ரத்தம் கொதிக்கிறது. தடதடவென்று எதிரில் வந்து]

**இந்திரா:**–அப்பா! இதென்ன வெட்கக்கேடு? இவருக்கு எவ்வளவு ரூபாய் நீங்கள் கொடுக்கவேண்டும்?...

**கடன்:**—இவர் கடன்வாங்கியது உங்களுக்கும் தெரியாதாம்மா? 5 ஆயிரத்திற்கு மேலாகியிருக்கிறது. ஏதோ நாணயமாய்க் கொடுத்துவிடுவார் என்று கைமாத்தாய் வெறும் அண்டிமாண்டில் கொடுத்துவிட்டேன். இந்த மானங்கெட்ட மனுஷ்யன்...

**இந்:**—ஐயா! தயவுசெய்து நீங்கள் அனுவச்யமாய் என் பிதாவைப்பேசவேண்டாம். அம்மா! இங்குவா...

[மீனுக்ஷி வருத்தத்துடன் வருகிருள். இந்திரா தானுகவே தாயாரின் சங்கிலி, தன் வைரத்தோடு, கைவளைகள் முதலியவற்றைக் கழற்றிவைக்கிருள்.]

**இந்:**–ஐயா! இதோ! உம்முடையகடனுக்கு இவைகளை ஈடாகவைத்துக்கொள்ளும். இன்னும் பத்து தினங்களில் நாங்கள் பணத்தைச் சமாளித்துக் கொடுத்துவிடுகிறோம்.

(மீனுக்ஷி கண்ணீர்விடுகிருள். சர்மா திருகத்திருக விழிக்கிருர். பெண்ணை விரைத்துப்பார்க்கிருர்.)

சர்மா:—ஏய் இந்திரா! இதென்ன அதிகப்ரஸங்கித் தனம்: இந்த காலத்து சவரன் விலைக்கும் வைரத்தின் விலைக்கும் இந்த நகைகள் 10 ஆயிரம் ரூபாய் தாளும். இதைக் கழட்டிக் கொடுக்கிருயா!...ஓய். உமக்கு...

கடன்:—ஆமாம். எனக்குக் கடுக்காய் கொடுக்கமுடியாது. சின்னஞ்சிறு குழந்தையாகிய இவளுக்கிருக்கும் புத்தியும் நாணயமும்கூட உமக்கில்லையே!

இந்:—ஐயா! ஒரு தரம் சொன்னல் உமக்குத்தெரியவில்லை: மரியாதையாய் போய்வாரும். அப்பா! உடனே இவைகளை இன்றே விற்று அவருடைய தொகையைச் செலுத்திவிட்டு மறுகாரியம் செய்யுங்கள்...ஐயா! இன்று இரவு அண்டிமாண்டுடன் வாருங்கள்; கடனைத் தீர்த்து விடுகிருேம்...

[கடன்காரன் போகிருன்]

மீனுக்ஷி:—இதென்ன திருவிளையாடல் புராணம்! கல்யாண வயசுடைய பெண்ணையும் பிள்ளையும் வைத்துக் கொண்டு இப்படியும் இந்த அல்ப மனிதனிடம் வார்த்தை கேட்பார்களா? அல்பஸகவாஸம் ப்ராணசங்கடமல்லவா! இந்திராவுக்குக் கல்யாணம் செய்யவேண்டுமென்றுசொல்கிறபோதும் பிள்ளைக்கு விவாகம்செய்து வரதக்ஷிணை வந்ததும் செய்வதாகச் சொல்கிறீர்கள். கடன்காரனுக்கும் வரதக்ஷிணை வந்ததும் கடன்கொடுப்பதாகச் சொல்கிறீர்கள்; இதென்ன வேடிக்கை?

இந்:—வேடிக்கையும்இல்லை விளையாட்டுமில்லேம்மா! அப்பா தன் மகனையே முதலாக வைத்து வ்யாபாரம் செய்யப்பார்க்கிருர். பையனை விற்றுப் பணம் வந்தால் பெருமையல்லவா?

சர்மா:—சீச்சீ ! துஷ்டே...வாயெ மூடு...ஏ மீனாக்ஷி' என் அம்மாஞ்சியின் பிள்ளைக்கு இந்திராவைக்கொடுத்தால் நமக்கு எத்தனைவிதத்தில்நன்மைஉண்டு! அதைவேண்டா மென்று நீ முட்டுக்கட்டைபோட்டு என் ப்ராணனை வாங்கு கிறாய். நான் ஒரு வார்த்தை சொன்னால் போரும்...

மீனா:—ஏன்! நீங்கள் பிள்ளையை ஏலம்போட்டுக் கல் யாணச்சந்தையில் விலைபேசப்பார்க்கிறீர்களே! அதுபோல் நல்லவரனைப் பார்த்து அந்தப் புள்ளையை விலைக்கு வாங்கி இந்திராவைக் கொடுப்பதுதானே ! நீங்கள் மட்டும் மகனை விற்கவேணும்; இந்திராவை மட்டும் சொத்தல் புழுத்தலுக்குத் தள்ளவேணுமா ! இதோ பாருங்கோ ! என் உசிரு இருக்கும்வரையில் அவளை அப்படியெல்லாம் கொடுக்கமாட்டேன், தெரிஞ்சுதா? கல்யாணமில்லாமல் இருந்தாலும் இருக்கட்டும்...

108632

சர்மா:—எப்படியாவது தொலைஞ்சு போங்கோ!...

[வெளியே போகிறார்]

இந்:—ஏம்மா வீணாக சண்டை போடுகிறே! அப்பா வின் மூர்க்கத்தனந்தான் தெரிந்திருக்கிறதே...அம்மா ! வாசல்லே ஏதோ வண்டி வந்து நிற்கிறதே...யாரா வரா... ஓ...வாங்கோ ! வாங்கோ...அம்மா...மாமாவும் மைதிலியும் வராம்மா...

[நாகஸாமியும்மைதிலியும் வருகிறார்கள்; இந்திரா மைதிலியைச் சேர்த்துக் கட்டிக்கொள்கிறாள். மைதிலி அத்தைக்கு நமஸ்காரம் செய்கிறாள்]

மீனா:—[தன் மருமாளின் அழகைக் கண்டு மனம் பூரித்துச் சேர்த்தணைத்து முத்தமிட்டு,]

என் ராஜாத்தீ ! இதற்குள் நீ இத்தனை பெரியவளா வளர்ந்துவிட்டாயே! அம்மா வரல்லையா? ஏண்டா நாக ஸாமீ! வருவதாகக் கடிதமே போடவில்லையே!



O—,2 ...

நாக:—என் அக்கா! அக்கா வீட்டிற்குத் தம்பி சுதந்தரமாய் நினைத்தபோது வந்து இறங்காமல் முன்கூட்டிக் கடிதமெழுதி மரியாதையை எதிர்பார்க்கவேணுமா? அத்திம்பேரும் சேகரனும் எங்கே?

இந்:—மாமா! இப்படித்தான் சகஜமாய் வந்திறங்க வேணும். மைதிலி இப்போது நிரம்ப அழகாயிருக்கா மாமா! நான் அவளைப்பார்த்து நாலுவருஷமாயிடுத்தோன்னோ!

மீனாட்சி:—ஏண்டியம்மா! எங்கக்கூட்டத்தில் அழகுக்கா குறைவு? நான் ஆதியில் எப்படி இருப்பேன் தெரியுமோ! தந்த பொம்மை மாதிரி இருப்பேன்...உங்கப்பா அப்படியே...

இந்:—மயங்கிப்போய் விட்டாரா? ஏம்மா! இப்பமாத்திரம் என்ன......தஞ்சாவூர், பூதம்பொம்மைமாதிரிதானே இருக்கே...மைதிலி! அத்தைமாதிரி உப்பிவிடாதேம்மா!... அதோ சேகர் வந்துவிட்டானே...அண்ணா! அண்ணா; யார்வந்திருக்காபாரு...மைதிலீ! அண்ணாவைப் பார்த்திருக்கிறாயா?

சேகர்:—மாமா! நமஸ்காரம்; எப்போ வந்தீர்கள்?

மைதிலி:—அத்தான்! நமஸ்காரம்; எங்களை நினைவிருக்கிறதா?

[இருவருடைய பார்வையிலும் அன்பு ததும்புகிறது. சேகரன் முகம் மலருகிறது. மைதிலி நாணி இந்திரா பக்கத்தில் நிற்கிறாள்.]

சேகர்:—மாமா! மைதிலி நாட்டியத்தில்தான் கெட்டிக்காரி என்று அம்மா அடிக்கடி சொல்லுவா. இப்போது பேசுவதில்கூட கெட்டிக்காரியாக இருக்கிறாளே!...நினைவு இருக்கிறதாஎன்று கேட்கிறாள்? யோசனை பண்ணிப்பார்த்தால் தெரியும்!...

இந்:—அண்ணா! உன்னிடம் பேச்சுக்கொடுப்பதற்கு ஏதாவதொரு சாக்கு வேண்டாமா?... அதற்காக நினைவிருக்கிறதா என்று கேட்டு நினைவைத் தூண்டுகிருள். அதுதானே மைதிலி!...

நாக:—அக்கா! அத்திம்பேரெங்கே?...நான் இந்த முறைவெறுமனேபோகமாட்டேன்...எப்படியாவதுமைதிலியின் விவாகத்தை முடித்துக்கொண்டுதான் போகவேண்டும். சேகரனைத்தவிர வேறெங்கேயும் குழந்தையைக் கொடுக்க என்மனது வரவில்லை. அத்திம்பேரிடம் இந்த விஷயத்தைத் தீர்த்துப் பேசிவிடவேண்டும்...

மீனு:—எனக்குமட்டும்ஆசையில்லையாடாப்பா...பட்டுக் கொடிபோல இருக்கும் நம்ம குழந்தையைவிட வேறு பெண்ணை நான்மட்டும் ஆசைப்படுவேனு? அவர் என்னவோ ஒரேபிடிவாதமாய் வரதட்சிணையாம்,போரதட்சிணையாம். எனக்கு சொல்லக்கூடப் பிடிக்கவேயில்லை. மூர்க்கத்தனம் பண்ருரே...நான் என்ன செய்வேன்? குழந்தையோ கண்கொள்ளாதஅழகுவெள்ளமாயிருக்கா! அதோசேகரன் அவளைப்பார்க்கிற பார்வையைப் பாரேன்...

[இந்திரா எல்லோருக்கும் டிப்பன் காப்பி கொடுக்கிருள், எல்லோரும் சாப்பிடுகிருர்கள்.]

இந்:—மைதிலீ! ஒரே ஒரு டான்ஸ் ஆடம்மா! நான் பார்த்து எத்தனையோ வருஷமாகிவிட்டது.

மீனு:—என்ன இந்திரா! வந்ததும் வராததும் ஆடச் சொல்கிருய்? சிரமமாயிராதோ!

இந்:—ஒன்றும் இருக்காதம்மா! அப்பா வருவதற்குள் ஒரேஒரு பாட்டு ஆடட்டும். அவர் வந்தால் அவருடைய "மூட்" எப்படி இருக்குமோ...மாமா! ஆடச்சொல்லுங்கோ...

மாமா:—இதற்கென்னம்மா பிரமாதம்? நீ பாடு; அவள் ஆடட்டும்.

(மைதிலி சலங்கைகட்டிக்கொண்டு வருகிருள்)

மீனு:—இந்த இடுக்குமுடுக்கில்எப்படியம்மா ஆடுவது?

சேகர்:—என்னும்மா! இதை சபை என்று எண்ணி விட்டாயா? நம்ம வீடுதானே; நாற்காலிகளை ஓரமாய்ப் போட்டால் போகிறது.

[தானே போடுகிருன். இந்திரா பாடுகிருள். மைதிலி ஆடுகிருள். மீனுட்சி மனம் பூரிக்கிருள். சேகரன் தாளம்போட்டுத்தலையசைத்துஆனந்தமாகப் பார்க்கிருன். நாட்டியம் முடிவதற்குமுன் சர்மா வருகிருர். மைதிலி மிரண்டுபோய் நாட்டியத்தை நிறுத்தி விட்டு ஓடி சலங்கையை அவிழ்க்கிருள், சேகரனும் உள்ளே போய்விடுகிருன்.]

நாக:—அத்திம்பேரே! வாங்கோ! நமஸ்காரம்.

சர்மா:—எப்போ வந்தே...சவுக்யந்தானே?

மைதிலி:—அத்திம்பேரே! நமஸ்காரம்.

(நமஸ்காரம்செய்துவிட்டு உள்ளே போய்விடுகிருள்.)

மீனு:—இப்பதான் வந்தான்..உங்களிடந்தான்வந்தான். மைதிலியை நம்ம சேகரனுக்கு எப்படியாவது நீங்கள் முடித்துவைக்கணும்னு கேட்கவந்தான்.

சர்:—ஹி ஹி!......இதற்கென்னப்பா தடை? நான் முன்பு சொல்லியபடி 10 ஆயிரம் ரொக்கம் கொண்டுவந்திருக்கிருயா! அப்படியானல் இன்றே இப்போதே நிச்சய தார்த்தம் செய்துவிடலாம்.

நாக:—அத்திம்பேரே! இன்னமும் இதே பதில்தான? பணந்தான உமக்கு பிரதானம்? மக்கள் மனிதர்கள் பிர

தானமில்லையா! நம் சொந்த பாந்தவ்யம் கத்திரித்துப் போகலாமா! அக்காவைக்கொடுக்கும்போது அப்பா ஆயிர மாயிரமாகப் பணம் கொடுக்கவில்லையா?...

**சர்:**—சேச்சே!...அந்த பழங்காலக்கதை எதற்கு? நானே வேறுஇடத்தில் கல்யாணம் செய்துகொண்டிருந் தால் இன்னும் எத்தனையோ ஆயிரங்கள் வந்திருக்கும். நான்தான் பயித்தியக்காரனாகிவிட்டேன் என்றால், என் மகனுக்குமா அப்படி! வீண்பேச்செதற்கு? பத்தாயிரம் உண்டானால் இங்கு வா. இல்லையேல்...(நடந்துகாட்டி) இப்படி போகலாம்.

**மீனு:**—(கண்ணீருடன்) இதென்ன அசட்டுப் பிடிவா தம்? தானாக வரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவார்களா? மைதிலியை இப்போது பார்த்தீர்களா! எத்தனை அழகாய் இருக்கிறாள்?

**சர்:**—சீச்சி! வாயைமூடு. அழகாம் அழகு. இந்த அழகு பணத்தைக் கொண்டுவருமாடீ? நாளைக்கே வறுமை யின் கொடுமையால் கண்ணீர்விட்டுக் கலங்கும்போது அழகுஎல்லாம் பறந்துபோய் மூதேவிபோலாகிவிடும். இதென்ன தொந்தரவு?...உன் தம்பியானால் எனக்கென்ன? யாரானால் என்ன? பணம் கொண்டுவந்தால் பேசலாம்.

[விடுவிடென்று மாடிக்குப் போகிறார்.]

**நாக:**—(மிகவருத்தத்துடன்) அக்கா! ஏதோ இம் முறையாவது கைகூடாதா? என்று ஆசையுடன் வந் தேன். இத்தனை நிர்த்தாட்சிண்யமாய்ப் பேசியபிறகு இனி நான் இங்கு அரை க்ஷணமும் இருக்கமாட்டேன். நான் போய்வருகிறேன்.

**மீனு:**—அப்பா நாகஸாமீ! அவசரப்படாதே. இன் னும் கொஞ்சம் பொறு. இன்னும் ஒரு ஆசை சொல்லிப் பார்க்கிறேன். குழந்தைகள் பார்த்துக்கொண்ட அன்புப்

பார்வை என் இதயத்தில் நிறைந்துகிடக்கிறது. நீ படபடத்து ஒன்றும்பேசிவிடாதே. அவரை விரோதித்துக் கொள்ளாமல் காரியத்தை முடிக்கப்பார்க்கிறேன். கண் கலங்காதே...

காட்சி முடிகிறது.

---

## 7-வது காட்சி

## இடம்: சேகரன் விடுதி.

[பாடியவாறு சேகரன் தன் சொக்காய்களுக்கு இஸ்திரி போடுகிருன். மைதிலி தட்டில் அவல் எடுத்துக் கொண்டு வருகிருள்.]

**மைதிலி:**—(பாட்டைக் கேட்டு இன்புற்றுப்பின்) பலே ஜோர்! பேஷாய்ப் பாடுகிறீர்களே அத்தான்! இதுவரையில் நீங்கள் பாடி நான் கேட்டதே இல்லையே!...

**சேகர்:**—ஓ! மைதிலியா! வா! வா! நான் பேசி நீ முதலில் கேட்டிருந்தால்தானே பாடிக் கேட்கப்போகிருய்! உன்னைவிடவா நான் அழகாகப் பாடுகிறேன்!......

**மைதிலி:**—சரி...சரி...இது முகஸ்துதிக் கழகமில்லை... அத்தான்! எங்கம்மா இதை ஸ்பெஷலாக உங்களுக்குக் கொடுக்கச் சொன்னுள். குசேலர் அவல்கொண்டுவந்தது போல் நானும் கொண்டுவந்தேன்.

**சேகர்:**—ஓகோ! குசேலருக்குச் செல்வம் சுரந்தது போல் வரங்கொடுக்க நான் கிருஷ்ணபரமாத்மா இல்லையே!. இன்னும் கேட்டால் எங்கப்பாவல்லவா உங்களிடம் பணம் பறிக்கப் பார்க்கிருர்.

[அவலை வாங்கித் தின்கிறான்]

மைதிலி:—(தானே இஸ்திரி போட்டவாறு) எத்தனையோ விஞ்ஞான சாஸ்திரம் கண்டுபிடிக்கிறார்களே! பணம் காய்க்கும் மரத்தை யாராவது கண்டுபிடித்துவிட்டால் அப்போதுகூட உங்கப்பாவுக்கு த்ருப்தியாகுமோ ஆகாதோ பாவம்!...

சேகர்:—(கடகடவென்று சிரித்தபடி) பலே பேஷ்! மைதிலி! நீ வெகு சாதுர்யமாய்ப் பேசுகிறாயே! இதோ பார் மைதிலீ! நீ இப்படி உட்காரு. பிறகு இஸ்திரி போடலாம். வந்துள்ள சற்றுநேரங்கூடப் பேசாமல் இதென்ன வேலை செய்வது?...

மைதிலி:—வெகு சமத்தாய் பேசுகிறீர்களே! வாய் பேசினால், கை காரியம் செய்யாதா என்ன? வாயும் பேசிக் கையும் வேலைசெய்து கண்ணும்...

சேகர்:—சரி! சரி! யாராவது பார்த்துக்கொண்டு வரப்போகிறார்கள்?...அதிருக்கட்டும் மைதிலீ! நீ அந்த நாட்டுப்புறத்தில் நல்ல படிப்பில்லாமல் இருப்பதைவிட இங்கேயே இந்திராவுடன் நீ படிக்கக்கூடாதா? உன்னை விட்டு உன் பெற்றோர்கள் இருக்கமாட்டார்களா?

மைதிலி:—அத்தான்! எனக்கும் உயர்தரப் படிப்புப் படிக்கவேண்டும்; அதைப் பயன்பெற உலகத்துக்கு உபகாரமாக உபயோகிக்கவேண்டும் என்ற ஆசைதான். அப்பாவுக்கும் நிரம்ப ஆசைதான். என்னைவிட்டு என் பெற்றோர்கள் இருப்பதற்காகத்தானே இங்கு கூட்டிக் கொண்டு வந்தார்...ஆனால் உங்கப்பாதான் பணத்தை விட்டுப் பிரிந்திருக்கமாட்டார்போலிருக்கிறது...அதை நினைக்கத்தான் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. கையிலிருந்தால் கொடுக்கமாட்டாரா?...

சேகர்:—மைதிலீ! எனக்கும் இதுவிஷயத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. இத்தனை வயதான பிறகுகூட எங்கம்மா இது விஷயத்தில் அடிக்கடி அப்பாவிடம் திட்டும் உதையும் வாங்குகிருள்...உன் பொருட்டு இந்திரா எவ்வளவு கவலைப்படுகிருள் தெரியுமா! அப்பாவின் பிடிவாதத்திற்கு விமோசனமே இல்லையே...எங்காவது திருடிக்கொண்டுவந்து பணத்தை அவர்காலில்...

மைதிலி:—(இடைமறித்து) ஐயையோ! போதும்! நீங்கள் ஏற்கெனவே என் உள்ளத்தைத் திருடியது போதும்....பகிரங்கமாய் பணம் திருடும் கள்ளனுக வேண்டாம். அம்மாதிரி அசட்டுக் காரியத்தைச் செய்து விடாதீர்கள் அத்தான்!...(ஏக்கம் நிறைந்துபார்க்கிருள்.)

சேகர்:—(மைதிலியின் இருகைகளையும் பிடித்துக் கொண்டு) மைதிலீ!...நமக்கு இந்த பாக்யத்தைப் பகவான் தடைசெய்யாமல் கொடுப்பாரா! என்று இரவு பகல் ஏங்குகிறேன்...நம்மைப் பிரித்துவிடும் வைரி பணந்தான் போலிருக்கிறதே...எனக்கு வருகிற கோபத்தில்...

மைதிலி:—(வெகு முறைப்பாக நிமிர்ந்து நின்று) அத்தான் வருகிற கோபத்தில் பெற்றவர்களை த்வேஷித்துக் கொண்டு கதைகளில் வருவதுபோல் காதல் கல்யாணம்..

சேகர்:—சேச்சே...என்ன மைதிலி! என் வார்த்தை முடிவதற்குள் அத்தனை அவசரப்பட்டு என்னை முட்டாளாக்கிவிடுகிருயேஎங்கப்பாவின்பணத்தாசையைப்போக்க நான்சகலவிதமான த்யாகத்தையும் செய்யத் தயாராயிருப்பேனேயன்றி இவர் பணத்தாசைக்கு நான் இணங்கமாட்டேன் என்றல்லவா சொல்லவந்தேன். மைதிலி! அப்படியொரு பயங்கரம் நேர்ந்துவிடுமாயின் உன்னை உன் பெற்ருேர்கள்...

மைதிலி:—அத்தான்! அப்படி கனவுகூடக் காண வேண்டாம். தங்களுக்கென்று அர்ப்பணம்செய்துள்ள என்னை வேறொருவருக்கும் கொடுக்கமுடியாது...

[சர்மாவின் குரல்கேட்கிறது]

ஐயையோ! அத்திம்பேர் வந்துவிட்டார். அதோ குரல் கேட்கிறது. பார்த்தால் அனர்த்தமாகிவிடும். நான் போகிறேன்... [ஓடுகிறாள்.]

[சேகர் வருத்தத்துடன் அந்த திக்கையே பார்க்கிறான்.]

காட்சி முடிகிறது.

---

## 8-வது காட்சி

இடம்:—சர்மாவின் வீடு.

சர்மா:—யாரடீ அங்கே!...இங்கு வா!...உன் தம்பி ஊருக்குப்போய்விட்டானா?...

மீனாக்ஷி:—ஊருக்குப்போகாமல் என்ன செய்வான்?.....

சர்மா:—என்ன செய்வானா?...அழகா பணத்தைக் கொண்டு எண்ணிவிட்டு...அத்திம்பேரே...

இந்திரா:—(கோபத்துடன்) அத்திம்பேரே! இதோ பணம். அதை விழுந்துவிழுந்து நமஸ்காரம் பண்ணிவிட்டு எடுத்து இரும்புப் பெட்டியில் வைத்துப்பூட்டுங்கள்...உம்...இரும்புப்பெட்டி ஏது?...தகரப்பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்...இதோ பெண்ணு...

சர்மா:—சீச்சீ! அதிகப்ரஸங்கிக்கழுதை! ஏதேது வாய் மிகவும் வளர்ந்துவிட்டதோ! இதோ பாரு! முதலில்பணம்...

பிறந்தான் பெண்...தெரிஞ்சுதா?... அதோ வருகிறரே... உள்ளே போங்கள்...வாங்கோ சார்! வாங்கோ! வாங்கோ!... ஏது நேற்றே வருவதாகச் சொல்லிவிட்டு...

(தரகன் ஒய்யாரமாக வந்து உட்காருகிறன்)

தரகன்:—என்ன பண்றது ஸார்! உத்யோகத்தின் பேதாபேதங்கள் அபாரமாயிருக்கு பாருங்கோ! உங்க உத்யோகங்கள் ஒரே இடத்தில், ஒரேமாதிரி, ஒரே விஷயம், ஒரே நிம்மதி...என் விஷயம் அப்படி இல்லே பாருங்கோ... இதோ இத்தனையும் பெண்கள் ஜாதகம்...இத்தனையும் பிள்ளைகள் ஜாதகம்...நான் பெரிய காரியத்தில்...

சர்மா:—ஆமாமாம்!...கல்யாணம் என்றல் சாமான்யமானதா?...சரி...இப்போது...

தரக:—இப்போது சகலத்தையும் முடித்துக்கொண்டே வந்துவிட்டேன்ன. மேலே முகூர்த்தம் வைக்கவேண்டியதுதான். அந்தப் பெண்ணின் புகைப்படத்தையும் கொண்டுவந்திருக்கிறேன். இதோ பாருங்கோ!... நேரே பார்க்கணுமானலும் இப்பவே கூட்டிண்டுபோறேன்.

[புகைப்படத்தைக் கொடுக்கிறர். சர்மா வாங்கிப் பார்த்து ப்ரமாதமாய் ரஸிக்கிறர்.]

சர்மா:—அடாடாடா!... என்ன அழகு! என்ன கம்பீரம்! என்ன ஷோக்கான பார்வை! அந்த கண்ணைத் தான் பாருங்கோ. அப்டீ ஒருடால் அடிக்கிறது. என்ன... மீனு...தாமரை இதழ் அப்டீன்னு கண்ணைப்பத்தி வர்ணிப்பாளே!...அப்படியே அசல் தாமரையாகத்தானே இருக்கு. நம்மசேகரன் நல்ல அதிர்ஷ்டசாலி சார்...

தரக:—அதில் ஆக்ஷேபனை உண்டான்ன?...அந்த பெண்ணுகூடப் பிறந்தவா யாருமில்லே. சுமார் 5 லக்ஷம் ரூபாய் இருக்கிறது. அவர்கள் வஸிக்கும் பங்களா மட்டும் ஒருலக்ஷம் தாளுமய்யா!...லக்ஷம்!...அப்டீஜில்லுனு இருக்கு சார்! சகலமும் இந்த பெண்ணுக்குத்தான். அது தான் அங்கு பாயிண்டு. பெண்ணுக்குப் பேரும் அஞ்சன.

**சர்மா:**—அவளுக்கு ஆஸ்தியும் அஞ்சு லக்ஷம். பலே பேஷ்...அடியே!...இங்குவா!...இதோ இந்த படத்தைப் பாருடீ பாரு! பெண்ணின் பெயரும் அஞ்சனா...பெண்ணுக்கு சொத்தும் அஞ்சு லக்ஷம்!...தெரிந்ததா?...

[மீனாக்ஷி படத்தைப் பார்க்கிருள்; முகத்தில் தெம்பு, களை இல்லை.]

**மீனு:**—இந்திரா, இங்குவா!...

**இந்:**—எம்மா!... (படத்தை மீனு கொடுக்கிருள். இந்திரா வாங்கிப் பார்த்துப் பல்லைக் கடிக்கிருள்.)

அம்மா!... இவள் வேறு யாருமில்லை...என்னுடன் படிக்கும் மாணவி அஞ்சனாக்ஷி. இவளை எனக்கு வெகு நன்ருகத் தெரியுமே...

**சர்மா:**—பலே பேஷ்! என் மகளுடைய சினேகிதையே மருமகளாகிவிட்டாளா!...இனி என்னகுறைவு?

**இந்:**—என்ன? என்ன? மருமகளாக்குவதா?... ஐயோ...போதுமே...அம்மா! இந்த பெண் எனக்கு மிகவும் ஸ்னேகம். இவளுக்கு வயது என்னைவிட 4, 5 அதிகமாகிறது. இவளுடைய பணத்தைப் பார்த்து ப்ரமிக்கும் பல பிள்ளைவீட்டார்கள் இவள் பிதாவின் கொடிய துர்வ்யாதியைக்கண்டு நடுங்கி ஓடிவிடுகிருர்கள்.

**மீனு:**—ஐயையோ! துர்வ்யாதியா?...

**இந்:**—ஆமாம்! கர்மவ்யாதி பாவம்! தேகம் பூராவும் குன்றிவிட்டது. கூலிக்கு மாரடிப்பவர்களாகிய தரகர்கள் கொண்டுவரும் வரன் எப்படியம்மா இருக்கும்? செவிடு, குருடு, ஊமை, நொண்டி, முடம்...அடாடா!... அதோ அடுத்தாத்தில் ப்ளேட்டு பாடுகிறது பாரம்மா; அந்த பாட்டை நன்ருகக் கேளுங்கள்!

[சர்மாவின் முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடிக்கிறது. தரகன் முகத்தில் அசடுவழிகிறது. தாயும் மகளும் பாட்டை ரஸமாகக் கேட்கிறார்கள். தரகன் சமயம்பார்த்து மெல்லநழுவுகிறான். இதைப்பார்த்துக் கொண்டு சேகர் வருகிறான். தரகனை விழித்துப் பார்க்கிறான். தரகன் விழிக்கிறான்.]

இந்:—பேஷ்! என்ன உண்மையான பாட்டு பார்த்தயாம்மா ... அண்ணா!...குடுகுடு...நல்லகாலம் பொறந்திடுச்சு. இதோ பாரண்ணா! அஞ்சனாதேவியுடன் அஞ்சுலக்ஷம்ரூபாய் சொத்து! ஏழேழு தலைமுறைக்கு வ்யாதி! இத்தனையும் தரகர் ஒருவரே கொண்டுவந்தார் பாவம்!...

சர்:—(பல்லைக் கடித்துக் கையைப் பிசைந்து) சீச்சீ! மூளைகெட்ட மிருகங்களே! கேலிக்கூத்தா அடிக்கிறீர்கள்?.. பெண்ணின் தகப்பனுக்கு வ்யாதியானால் பெண்ணுக்கென்ன கேடு? பணத்திற்கென்ன சொத்தை? நம்ம வம்சத்தில் யாராவது சேர்ந்தார்ப்போல் பத்தாயிரம் ரூபாயைக் கண்ணால் பார்த்திருக்கிறார்களா? இனிதான் பார்க்கமுடியுமா? மூதேவிகளே!...அஞ்சுலக்ஷம் ரூபாய் என்றால் அதன் அளவும் அருமையும் உங்களுக்கென்னடீ தெரியும்? தானாவந்த ஸ்ரீதேவியை காலால் உதைக்கிறீர்களா, சீச்சீ! உள்ளே போங்கள்...சார்..சார்,..இப்படி வாங்கோஸார்ணா!..

தா:—ஸ்வாமிகளே! என் முதுகு தோல் சரியானபடி இருக்கும்போதே வீட்டுக்குப்போயிட்ரேன்; என்சரீரத்தில் தும்பு தட்டவேண்டாம்!...

சேகர்:—(தரகன் திக்கைப்பார்த்துக் கையை ஓங்கிக் குத்துவதாகக் காட்டுகிறான். மீனா கையைச் சுடுக்கிப் பல்லைக் கடிக்கிறாள். இந்திரா நங்குகாட்டி முகத்தைக்கோணிக் காட்டுகிறாள்.)

ஓய்! திரும்பிவந்தால்காலைஉடைத்துவிடுவேன்; இனி இந்தப்பக்கம் தலைகாட்டினால் தென்னாலிராமன் செய்த மாதிரி அஞ்சனாக்ஷியையும் அஞ்சுலக்ஷத்தையும் கொண்டு

வந்ததற்காக அஞ்சுகுடுமி வெட்டி அழகா செம்புள்ளி கரும்புள்ளி குத்தி அனுப்பிவிடுவேன். ஜாக்ரதை!...

[தாயும் மகளும் சிரிக்கிருர்கள்.]

**சர்மா:**—க்ரகசாரம்....இப்படியும் ஒரு மூளைகெட்ட குடும்பம் இருக்குமா?...தகப்பனுக்கு வ்யாதியாலும்பணத் திற்கும் பெண்ணுக்கும்கூட வ்யாதியா...மூளைகெட்ட பீடைகளே...டேய், சேகர்!...

**சேகர்:**—நிறுத்துங்களப்பா!...என் கல்யாணத்தைப் பற்றி இனி எந்தவிதமான கவலையும் எடுத்துக்கொள்ள வேண்டாம். எனக்குக் கல்யாணமே வேண்டியதில்லை.

**சர்மா:**—டேய்...இதோ பாரு!...

**சேகர்:**—நன்ருய்ப் பார்க்கிறேன்...கண்ணைத் திறந்து கொண்டுதான் பார்க்கிறேன்...கல்யாணமென்ருல் மாமன் மகள் மைதிலியைப் பேசுங்கள். இல்லையேல்...

**சர்மா:**—என்னடா இல்லையேல்?...இல்லையேல், சாமி யாராய்டுவாயோ?...

**மீன:**—இதென்ன வெட்கக்கேடு சண்டை?...

**இந்:**—பணம் பணம்! என்கிற ஆசையில் அப்பா வின் கண்ணே மறைந்து தெரிகிறது...அதனுல்தான் துடுக்கான வார்த்தைகளும் வருகின்றன...

**சர்மா:**—என்ன சொன்னுய்! என்ன சொன்னுய்!...என் போதாக் காலத்திற்குத்தான் இந்த விபரீதபுத்தி உங்க ளுக்கு உண்டாகிவிட்டது. டேய் சேகர்?...

**சேகர்:**—அப்பா!...இந்த வீண்விதண்டாவாதத்திற்கு நான் தயாராயில்லை. உங்கள் கடனை யடைக்க நான் அட மானப் பொருளில்லை. இனி இந்தப் பேச்சே வேண்டாம்

[சேகரன் போய்விடுகிறான். தாயும் மகளும்கூடப் போகிறார்கள். சர்மா கோபத்துடன் இப்படியும் அப்படியும் திரிகிறார்.]

காட்சி முடிகிறது.

---

## 9-வது காட்சி

இடம்: நாகசாமியின் வீடு.

[பார்வதி கட்டிலில் படுத்திருப்பது. மைதிலி தேறுதல் சொல்வது.]

மைதிலி:-அம்மா!..நீவீண் கவலைப்படாதேம்மா!..நான் எத்தனை சொன்னாலும் நீ கேட்கமாட்டேன் என்கிறாயே... எனக்குக் கல்யாணமே வேண்டாம்மா...

பார்வதி:—கண்ணா! அசட்டுப்பிசட்டென்னு பேசாதே. உன்னையும் உங்கப்பாவையும் உன் அத்திம்பேர் இத்தனை அவமானப்படுத்தி அனுப்பிய மனக்கவலைதான் என்னை உருக்கிவிட்டது. இனி நான் தேறுவதேது?. என் மனக்கோட்டைப்படி பார்ப்பதேது? நீ என்னமோ சிறிசு. எனக்கு வந்திருக்கும் வ்யாதியைப்பத்தி உனக்கென்னம்மா தெரியும்? இது கட்டாயம் இலும்புருக்கிநோய்தான்...

மைதிலி:—(மிக வருத்தத்துடன்) அம்மா!...இப்படியெல்லாம் பேசாதேம்மா...உனக்கு ஒரு பயமும் வேண்டாம். நீ இம்மாதிரி சொல்வதால் அப்பா மிகவும் உருகிப் போகிறார்...அதோ டாக்டரம்மா வருகிறார்...வாருங்கள்! வாருங்கள் டாக்டர்!... எத்தனை சொன்னாலும் அம்மா கேட்கமாட்டேன் என்கிறாள். தனக்கு T. B.தான் வந்து விட்டதாம்...

டாக்டர்:—பேஷ்! நாங்கள் எல்லாம் எத்தனையோ கஷ்டப்பட்டுப் படித்து ஆராய்ச்சிசெய்து கண்டுபிடித்துச்

சொல்வதெல்லாம்வெறும் பொய்யா?..நீங்கள்சடக்கென்று சொல்லிவிடுகிறீர்களே!...நான் அதற்காகத்தான்சகலவித ரத்தப்பரீக்ஷையும் செய்துபார்த்துவிட்டேன். T. B.யே கிடையாது. உங்களுக்கு மனோவ்யாதிதான் இத்தனை பலவீனமாக்கிவிட்டது...

**மைதிலி:**—அப்பாடா! டாக்டர்! இப்பதான் என் உசிர் வந்தது...என் மனம் களிக்கிறது. அம்மாவுக்கு நல்ல தைரியம் சொல்லுங்கோ டாக்டர்!...சதா என் கல்யாணவிஷயத்தை எண்ணியே இப்படி உருகுகிருள். என்ன கல்யாணம் வேண்டிக்கிடக்கு? நானும் படித்து உங்களைப்போல் உத்தமத் தொழிலைச் செய்யவே ஆசைப் படுகிறேன்...

**பார்:**—டாக்டர்! விரலுக்குத்தக்க வீக்கந்தானே வீங்க முடியும்?...அசட்டுப் பெண் ஏதோ சொல்கிருளே...

**டாக்:**—மைதிலி சொல்வது குற்றமில்லை...பாழும் வரதக்ஷிணையின் கொடுமையினுல் எத்தனை குடும்பங்கள் நாசமாகிவிட்டன. கல்யாணமாகிய பெண்கள் கடைசியில் பிழைக்கவழிதெரியாமல் திண்டாடுகிருர்கள். நான் எத்தனைபேர்களுக்கு உதவி செய்திருக்கிறேன் தெரியுமா? ஆனுல், மைதிலி விஷயத்தில்...

**மைதிலி:**—என்ன டாக்டர்! எனக்குப் படிப்பு மூளையில் ஏருதா? நான் முட்டாளா?...

**டாக்டர்:**—அதற்குச்சொல்லவில்லை. நீ படிக்கச்சேர்ந்தவுடனே சேகர் வரதக்ஷிணை இல்லாமல் உன்னைக் கல்யாணம்செய்துகொள்வதாகவந்தால் படிப்புக்கு நீ முற்றுப் புள்ளிவைத்துவிடுவாய்! இல்லையா?...நேரமாகிறது...நான் வருகிறேன்...பயப்படவேண்டாம்...இந்த மருந்துகளைச் சாப்பிடுங்கள்; குணமாகிவிடும். அப்பா ஊரிலிருந்து வந்ததும் வருகிறேன்.

காட்சி முடிகிறது.

## 10-வது காட்சி

### இடம்: சேகரன் விடுதி.

சேகரன்:—சீச்சி என்ன உலகம்! என்ன பேராசை! மனமொத்த அன்புடன் நேசிக்கும் தம்பதிகளை ஒன்றுசேர விடாது தடுக்கும் பணமே?...உன் வலிமையினால் மனித வர்க்கம் எத்தனை நாசமடைகிறது! நீ நிறைய தாராள மாயிருக்கும் செல்வவந்தர்களையும் உன் திமிரினால் பாப மூட்டையைச் சுமக்கும்படியான இழிந்தமார்க்கத்தில் புகுத்திவிடுகிறாய். பணமற்றவர்கள் உன்னை அடைவ தற்குத் தாம் எந்த வழியிலும் துணிந்துவிடுகிறார்கள்...

[இந்திரா டிப்பன் கொண்டுவருகிறாள், அண்ண னின் அன்புசோகத்தைக்கண்டு விசனத்துடன் நின்றுவிடுகிறாள்...கண்ணீர் வருகிறது]...

உன்னால் நல்ல முறையில் உத்தமமான மார்க்கத்தில் வாழ்க்கைநடத்துகிறவர்கள் நூத்துக்குஒருவர்கிடைப்பது அரிதாக இருக்கிறதே...ஹா! மைதிலி! அன்று ஊருக்குப் போகும்போது கண்ணீருடன் என்னைப் பரிதாபகர மாய்ப் பார்த்தபார்வை என்னுள்ளத்தை உருக்குகிறதே. என் பிதாவின் பேராசையை ஒழிப்பதற்காக நான் கொள்ளையடித்து மூட்டைமூட்டையாகப் பணத்தை அவ ரிடம் கொடுத்துவிட்டு நான் நிம்மதியாக சிறையிலிருந்து அவருக்குப் புத்திவரும்படியாகச் செய்தால் என்ன?... எனக்கு வேறு வழியே தோன்றவில்லை. பிள்ளையைப் பெற்ற சில பாவிகள் கொள்ளைக் கூட்டத்திற்கும் மேல் பட்டவர்களாக மலிந்திருக்கும் அநியாயத்தை ஒழிக்க ஒரு வழியும் இல்லையா?...ஆம்!நான் கொள்ளை தான்... அடிக்கப் போகிறேன்...

இந்திரா:—(ஓடிவந்து அண்ணனின் கைகளைப்பிடித்துக் கொண்டு) அண்ணா! வேண்டாம்; சத்தியமாக நீ இம் மாதிரி காரியத்திலிறங்காதே. இதனாலும் நம்ம குடும்பத் திற்கு இழிந்தபேரும் அம்மாவுக்குத் தாளமுடியாத

விசனத்தினுல் தற்கொலை புரிந்துகொண்டு சாகவும் ஏது வாகுமேயன்றி அப்பாவுக்கு புத்தியேவராது. அண்ணு! நீ இம்மாதிரி விசனப்படுவதைப் பார்த்து என்னுலேயே சகிக்கமுடியவில்லை...

சேகர்:—இந்திரா!... நீ பேசாமல் உள்ளேபோம்மா! எனக்கு என்னமோ சங்கடம் செய்கிறது...

இந்:-அண்ணு! எதுசெய்தாலும் அதைப்பொறுத்து ஜெயிப்பவன்தான் உத்தமன். அதீதமான முறையிலிறங்கு வது சரியில்லை...

சேகர்:—இந்திரா! எனக்குமட்டும் அந்த விவேக மில்லையா? மைதிலியின் கண்ணீர்...

[தொண்டையை அடைக்கிறது. திரும்பிக் கொண்டு கண்ணைத் துடைக்கிருன்]

இந்:—அண்ணு! மைதிலியின் கண்ணீரை நானும் பார்த்தேன். இதற்கோர் நல்ல மார்க்கத்தைக் கடவுள் கட்டாயம் காண்பித்து அப்பாவையும் திருந்தச்செய்வார் என்ற நம்பிக்கை எனக்குத் தோன்றுகிறது...நீ கவலைப் படாதே. இந்தா காப்பியைச் சாப்பிடு..,

சேகர்:—எனக்கு ஒன்றும் வேண்டாம், இந்திரா! நான் வெளியே போகிறேன்.

[தடதடவென்றுபோகிருன். இந்திரா கண்ணீர் பெருக நிற்கிருள். மீனு வருகிருள்.]

மீனு:—இதென்ன இந்திரா?...ஏன்? என்ன சமா சாரம்?...கண்ணீர் ஏன் விடுகிருய்?...அண்ணு எங்கே?...

இந்:—அம்மா! நான் உன்னை ஒருவிஷயம் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். நீ நம் குலம் விளங்கி நன்ருயிருப் பதற்காகக் கட்டாயம் இசையவேண்டும். அண்ணுவின் ஆழமான ப்ரேமையின் எல்லையை நான் இன்று நேரில்

பார்த்தபிறகு என் மனம் துடிக்கிறது. மைதிலியின் அன்பும் அப்படியே. மனமொத்து ப்ரேமையுடன் விரும்பும் மணவாழ்க்கையை அப்பா பணம்பணம் என்று கூக்குர லிட்டுப் பொசுக்கிவிடுகிறார். அண்ணன் இந்த துக்கம் தாளாது திருடவும் துணிந்துவிடுவான்போலிருக்கிறது!

மீனா:—(திடுக்கிட்டு)ஐயையோ! திருடவா துணிகிறான்?... இந்திரா!... இதற்கென்னம்மா வழி இருக்கிறது?

இந்:—கட்டாயம் வழி இருக்கிறது; நம் அண்ணாவின் சந்தோஷ வாழ்க்கைக்காக நான் எதையும் பொறுக்கத் தயாராயிருக்கிறேன். அப்பா அன்று சொன்னபடி அவரு டைய மாமன் மகனுக்கு என்னை உடனே விவாகத்தைச் செய்துவிடுங்கள். நான் அவரிடமிருந்து 15 ஆயிரம் ரூபாய் பணத்தை வாங்கி மாமாவிடம் கொடுத்து அப்பா வின் காலில் கொட்டிவிட்டு மைதிலியை அண்ணாவின் அன்புப்பரிசாக அளித்துவிடுகிறேன்...

மீனா:—இந்திரா!...இதைத்தானம்மா ஏதோ பெரிய பெரிய பீடிகை போட்டுப் பேசினாய்; எனது கண்களில் நீ ஒன்று; அண்ணா ஒன்று. ஒரு கண் தெரிவதற்காக ஒரு கண்ணை எந்த பெத்ததாயார் இழப்பாள், இந்திரா?...

இந்:—அம்மா!..,நீ வீணான தடை சொல்லாதே!...

மீனா:—தடை சொல்கிறேனா?...என்னுயிருடன் இந்த காரியத்திற்கு நான் சம்மதிக்கமாட்டேன்...ஏன்?...உன் அண்ணன் காதில் கேட்டால் அடியோடு இதைக் கண்டிப் பான். ரகஸ்யம் உனக்குத் தெரியாது. எந்த காரணத்திற் காக அஞ்சனாக்ஷியைநாம் விலக்குகிறோமோ அதேகாரணம் அந்த பையனுடைய அண்ணனுக்கு இருக்கிறது...

இந்:—ஹா...அப்படியா?... நிஜமாகவா?... ஐயோ!... இனி எந்தவழிதான்செய்து அண்ணாவின் மனத்தை மகிழ் விப்பதம்மா? நமக்கு உயர்ந்த நகைகள் கூட இல்லையே..

மீனு:—இந்திரா! நீ சின்னஞ்சிறுமியாகையால் வீண் கவலைப்படாதே. நான் இதற்கு எப்படியாவது வழி செய்து கடனாவது வாங்கி மாமாவுக்குக் கொடுக்க ப்ரயத்தனப்படுகிறேன். நீ வருந்தாதே.

காட்சி முடிகிறது.

---

## 11-வது காட்சி

(மிகுந்த கோபத்துடன் சர்மா வருகிறார்)

சர்மா:— அயோக்யப்பயல்...அதிகப்ரஸங்கி...வாலிபர் சங்கமாம் சங்கம்...வெங்காய சங்கம்,..

மீனு:—(காப்பியுடன் வருகிறாள்) ஏன்? என்ன சமாச்சாரம்?...ஏன் இத்தனை கோவம்?...

சர்மா:—கோவமா?...உன் பிள்ளை இருக்கிற அழகிற்கு கோவம்மட்டுமாவரும்?...அப்படியே...

மீனு:—இதென்ன?...விஷயத்தைச் சொல்லாமல்...

சர்மா:—விஷயமாம்விஷயம்!...பெருங்காயம்!...உன் அழகான புள்ளை இருக்கானே...அவன் ஒரு பெரிய மேடை ப்ரஸங்கியாய்விட்டானும். அயோக்யப்பயல்... வாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழாவாம் அவரைக்காயாம்! அதுக்கு இந்த பெரியவர் ஒரு சொற்பொழிவாளராம்! எந்த மடையனோ எனக்கு அழைப்பு ஒன்று அனுப்பி இருந்தான். பொழுதுபோக்கற்று அங்குபோய்த் தொலைஞ்சேன். அடேயப்பா!...என்ன கூட்டம்? என்ன ஆர்ப்பாட்டம்?...

இந்:—ஏம்பா!...நம்மஅண்ணாவா ப்ரஸங்கம்பண்ணினு?

சர்மா:—வவ்வவ்வ...ப்ரசங்கம் பண்ணு!...மொகரக்கட்டையைப்பாரு...அந்த ராக்ஷஸனின் தங்கை எப்படியிருப்பள்?...

இந்:—அப்பாவைப் போல!...

மீனு:—இந்திரா! அவருடன் எதிர்க்காதேம்மா...

சர்:—எதிர்க்காதேம்மா...உபதேசம் பண்ராளாம் உபதேசம்!..உங்க ஆத்தாவீட்டு புத்தி உனக்கிருக்கிறது போல் உன் பசங்களுக்கும் வந்திருக்கிறது. இல்லாது போனால் அந்த அல்பப்பய...சுண்டக்காவீரன், அத்தனை பெரிய கூட்டத்தில் வரதக்ஷிணையைத் தாக்கியும், பிள்ளை வீட்டாரைக் கண்டபடி திட்டியும்...ஏன்..எங்கப்பாகூட என்னை ஏலம் போடுகிறார்....வரதக்ஷிணைக்கு விற்கப்பார்க்கிறார்!...அத்தகைய கொடுமையை ஒழித்துவிட வீர வாலிபர்களாகிய நாமே கங்கணங்கட்டிக்கொள்ளவேண்டும்...என்று கர்ஜிக்கிறார் பெரிய சிங்கம்போலே...பளபள பள என்று பல்லு உதிர்ரமாதிரி கன்னத்தில் அறைந்து கூட்டத்தில் அவமானப்படுத்தவே நினைத்தேன்.

இந்:—எம்பா! நினைத்தபடிச் செய்திருந்தால் முதலில் நீங்கள் ஸெட்டுப்பல்லுக்கு ஏற்பாடு செய்துவிட்டல்லவா கூட்டத்திற்குப் போயிருக்கவேண்டும். அண்ணாவைப்போல் மத்தவர்கள் சும்மா இருப்பார்களா? ஓகோ! ஸெட்டுப்பல்லு வாங்குவதற்குக்கூட வரதக்ஷிணைப் பணம் வந்தபிறகல்லவா...

[ஓடி விடுகிறாள்.]

சர்மா:—ஏய்!மீனு!...நீ மக்களை வளர்க்கிறஅழகு வெகு நன்னாயிருக்கிறது! வாயைப்பாத்தியா...வரட்டும், முறித்து விடுகிறேன்...அந்த ராஸ்கல் அங்கு திட்டினான் என்றால் இந்த சனியனுக்கு இத்தனை துடுக்கா?...

தந்திச் சேவகன்:—சார்! தந்தி!...

மீனு:—ஐயையோ!,தந்தியா!...போய் சீக்கிரம்வாங்கிப் பாருங்கோ...வயத்தெ கலக்கறதே

சர்மா:—(வாங்கிப் பார்த்துவிட்டு) ஒரு கலக்கமும் வேண்டாம். எனக்கு மனது கொதிக்கிற கொதிப்பிலே என்ன பண்றதுன்னு பாத்தேன்...ஆபீஸ் விஷயமாய் அர்ஜெண்டாய் கல்யாணபுரத்திற்கு இன்றே புறப்பட்டுப்போகும்படி ஹெட்டாபீஸிலிருந்து தந்திவந்திருக்கிறது. சரி; ப்ரயாணத்திற்கு ஏற்பாடுசெய்.

காட்சி முடிகிறது.

## 12-வது காட்சி

இடம்: மைதிலியின் வீடு

நாகஸ்ாமி:—மைதிலீ! இங்குவாம்மா...

மைதி:—(விசனத்துடன் வருகிருள்) ஏம்பா!...

நாக:—நான் என்னம்மா செய்வேன். பாழும்பணம் உங்கள் அன்புவேரை அடியுடன் வெட்டும் வாளாக இருக்கிறது. உன் தாயாருக்கோ உடம்பு சரியில்லே. அவள் தன்ணேப்பற்றித்தான் மிகவும் அதைரியப்படுகிருள். உனக்குக் கல்யாணம் செய்து கண்ணுல் பார்த்துவிட்டால் போதும், தன் கவலே நீங்கி நிம்மதியாக உயிர்விடுவேன் என்கிருள்...

மைதி:—அப்பா! அம்மாவின்உடம்பைப்பற்றி எவ்வித கவலேயும்வேண்டாம். இது கொடிய இருமல் நோயல்ல. பலவீனத்திஞல் உண்டாகிய சோர்வுக்கு அபாயமில்லே என்று டாக்டர் நன்ருகச் சொல்லுகிருர். நான் நேரில் போய் விசாரித்து வந்தேன்பா...

நாக:—வாஸ்தவம்தான்! நான் என்ன கெஞ்சியும் உன் அத்திம்பேர் இணங்கவில்லேயே...என்னசெய்வது? சேகரனேவிட அழகாயும் புத்திசாலியாயும் பணக்காரனுயும்

இருக்கிற பையனுக்கு ஜாதகம் மிகவும் பொருத்தமாயிருக்கிறதாம். காலணா வரதக்ஷிணை வாங்கப்போவதில்லையாம். அன்று நீ பள்ளிக்கூடத்து ஆண்டுவிழாவில் ஆடியதைப் பார்த்தும் உன் சங்கீதத்தைக் கேட்டும் அந்தப் பையனும் அவன் பெற்றோரும் பரம சந்தோஷத்தை அடைந்துவிட்டார்களாம். தாங்களாக நேரே வந்து கேட்டார்கள். இப்போது ஆளை அனுப்பி இருக்கிறார்கள்...முதலில் முடித்துவிடவேண்டும் என்று ஆசை உன் தாயாருக்கு பறக்கிறது...

மைதி:—அப்பா! மன்னிக்கவேண்டும். மணந்தால் அத்தானை மணப்பேன். இல்லையேல் கன்னிகையாகவே இருந்து நான் தொழில் நடத்தி நம்குடும்பத்தைக் காப்பாற்றுவேன். நாட்டிய வகுப்பை நான் ஆரம்பித்தால் எத்தனை மாணவிகள் வந்து சேருவார்கள் தெரியுமா? அந்த ஒரு வித்தையே நமக்குப்போதும். என்னை இதோடு விட்டுவிடுங்கள்.

(போகிறாள்.)

நாக:—உம்!...இந்த தர்மசங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்? மனமொத்த அன்பின் ஆழத்தை வேரறுக்க யாரால்முடியும்?...ஏ பாழும் கொடிய வரக்ஷிணைப் பிசாசே! உன்னால் என்னருமைக்குழந்தையின் வாழ்வு இப்படியா பாழாகவேண்டும். உன்னை ஆட்டிவதைத்து ஓட்டக் கூடிய மந்திரவாதிகள் உலகத்தில் யாருமேஇல்லையா? உபயோகமற்ற விஷயத்திற்கெல்லாம் அரசாங்கம் சட்டம் விதிக்கின்றதே. இந்த அநியாயத்திற்கு ஒரு சட்டத்தை விதிக்கக்கூடாதா?...அக்ரமப் பைசாசமே...ரதிபோன்ற என் குழந்தையை நான் தனிக்கட்டையாகவா பார்த்துச் சகிப்பது?..அவள் கணவனுடன் சந்தோஷமாய் குழந்தை குட்டிகளுடன் குளுகுளுவென்று வாழ்வதைப் பார்க்கச் சகிக்காத பாவியா நான்!...ஆம்!...என் குழந்தையின் சந்தோஷத்திற்காக நான் கொள்ளைக்காரனாகிவிடுகிறேன்.. எங்காவது திருடியேனும் இந்தப் பணப்பேராசை பூதத்

திற்கு வரதக்ஷிணையைக் கொடுத்துவிட்டு என் கண் மணியை சேகரனிடம் ஒப்புவித்துப் பின் நான் சிறைச் சாலைக்குப் போய்விடுகிறேன். என் காரியமானதும் என் குற்றத்தை நானே ஒப்புக்கொண்டுபோய்விடுகிறேன். என் கண்மணி...

மைதிலி:—(ஓடிவந்து) அப்பா...போதும்! போதும்! உங்கள்யோசனையும் அதீதமான செய்கையும் போதும்! கொள்ளையடிப்பதாம்...கன்னம்வைப்பதாம்......இதென்ன பேச்சு? இத்தகைய கொடியமார்க்கத்தில் பணத்தைக் கொள்ளையடித்து அதை நீங்கள் ஒரு கொள்ளைக்கார னுக்குக் கொடுத்துவிட்டதால் எங்களுக்கு உண்மையான சந்தோஷம் உண்டாக முடியுமா? அதனுல் என்றுமேமாருத துன்பந்தான் உண்டாகும்; அப்பா!...வேண்டாம். தாங்கள் நான் முன் சொல்லியதை மன்னித்து இந்த வரனுக்கே ஏற்பாடு செய்துவிடுங்கள். இனி வீண் தாமதம் வேண் டாம். (கண்ணீர் பெருகப்போகிருள்.)

[நாகசாமி பெண்ணையே பார்த்துக் கண்ணீர் வழிய நிற்கிருன்]

காட்சி முடிகிறது.

---

## 13-வது காட்சி

[சர்மா வெளியூரில் ஒரு உத்யோகஸ்தர் வீட்டில் தங்குகிருர். உத்யோகஸ்தர் லக்ஷ்மீபதியுடன் பேச்சு]

சர்மா:—மிஸ்டர் லக்ஷ்மீபதி! ஏதோ நான் வந்த ஆபீஸ் காரியம் ஒருமாதிரி முடிவாகிறது. நாளை பூராவும் முடிந்துவிடும்; சகலமும் உங்களுடைய உதவியினுல்தான்.

[எசோதா காப்பி டிப்பன் இருவருக்கும்கொண்டு வந்து மறைவில்நின்று கொடுக்கிருள்; லக்ஷ்மீ பதி வாங்கி சர்மாவிடம் கொடுக்கிருர்.]

சர்:—இந்த குழந்தை தங்கள் நாட்டுப்பெண்ணு?... தங்கள் மனைவி...

லக்ஷ்மீ:—உம்!...அந்த பரிதாபம் இப்போது எதற்கு சார்? இவள் என் நாட்டுப்பெண்ணுமல்ல ஒன்றுமல்ல; என் பெண்தான்...

சர்:—உங்கள் பெண்ணு?..கல்யாணம்...

லக்ஷ்மீ:—ஆமாம்!...சாக்ஷாத் பெண்தான்; கல்யாணம் கர்மாதி எல்லாம் ஆய்விட்டது...அந்த வயித்தெரிச்சல் எதற்கு சார்?...

சர்:—சார்! மன்னிக்கணும்; ஏதோ, இரண்டு நாள் பழகியதால் கேட்கிறேன்....என்ன சமாசாரம்? மருமகப் பிள்ளை...தவறி...

லக்ஷ்மீ:—அப்படி எல்லாம் தவறிக்கூட அவன் சாகவில்லை. நல்ல செக்குஉலக்கைபோலத்தான் இருக்கிறன். ஏதோ! போதாக்காலக்கொடுமையினுல் அந்த சம்மந்தம் கிடைத்தது. பையன் ராஜாமாதிரி இருக்கிறன். 5 ஆயிரம் வரதக்ஷிணை கொட்டி அழுதேன்...

சர்மா:—ஊம்...அப்புறம்?...

லக்ஷ்மீ:—அப்புறம் என்ன சார்! சில பேராசைக்கார அல்ப டாக்டர்கள் ஆபரேஷன் சமயம்பார்த்து 'இத்தனை பணம் வைத்தால்தான் செய்வேன்' என்று கழுத்தறுப்பார்கள். அதுபோல் பிடிக்குப்பிடி பணம் வைத்தால்தான் என்று அட்டைபோல் அந்த கொள்ளைக்கூட்டத்துப் பாவிகள் என்னை உறிஞ்சிவிட்டார்கள். என் பெண் சுகப்பட்டால் போதுமென்று என்னையும் என்மனைவியையும் தவிர சகலத்தையும் வித்து அவன் எழவுக்குத் துலைத்து விட்டேன்...

சர்மா:—(முகத்தில் அசடுவழிகிறது) ஐயோ பாவம்! அப்புறம்...

லக்ஷ்மீ:—பெண்ணை புக்ககத்திற்கு அனுப்பியதோடு என் பாரம் நீங்கியதாக எண்ணினேன். நான் அப்படி நிம்மதி அடைவதற்குள், "இரண்டாவது தீபாவளிக்கு இரண்டாயிரம் ரூபாய் அனுப்பவேண்டும்...உன் மகள் ஸ்நானம் செய்யாதிருப்பதால் வளைகாப்புக்கு நாலுஜதை வளையல் செய்து, சீமந்தத்திற்கு 5 ஆயிரம் ரொக்கம் கொடுக்கவேண்டும்" என்று அந்த அல்பமனிதன் ஜாபிதா அனுப்பினான். எனக்குவந்த ஆத்திரத்தில் அவனை அப்படியே மென்னியைத் திருகிவிடலாமா என்றுகூடத் தோன்றிவிட்டது.

சர்மா:—ஊம்... அப்றம்...

லக்ஷ்மீ:—என்னை வித்தால்கூட இனி காலணாவுக்கு வழிஇல்லை என்று கண்டிப்பாய் எழுதினேன். அந்த கொள்ளைக்காரப்பாவிக்கு கடன் அடைக்க என் பணம் வேணுமாம். அவன் பெண்ணுக்கு விவாகம்செய்ய என் பணம் வேண்டுமாம். நான் கொடுத்த சீர்வகைகளை ஏற் கெனவே ஒருபெண்ணுக்குக் கொடுத்து விவாகம் செய்து விட்டார்கள். இம்மாதிரி பேமானிப் பிழைப்பு பிழைப் பதைவிட எச்சில் பொறுக்கித் தின்று வாழலாமல்லவா?.. என்னிடம் காலணாகூட இல்லை என்ற பதிலைப்பார்த்ததும்: நான்குமாத பிள்ளைத்தாச்சி என்ற கருணைகூட இல்லாமல் என் குழந்தையின்மீது மண்ணெண்ணெயை ஊற்றி அந் தப் படுபாவிகள் தீ வைத்துவிட்டார்கள் சார்! என்வயிறு எப்படித்தான் எரியாது! நீங்களே சொல்லுங்கள். இப்படி கொள்ளையடித்து வாழ எண்ணும் பேமானிகளை செக்கில் வைத்து ஆட்டினால் என்னசார்!...உடனே விஷய மறிந்து போலீஸார்வந்து எப்படியோ நடந்துவிட்டது, என் பெண் ஆறுமாதங் கழிந்து உயிருடன் உரித்த

கோழிபோல் வீட்டிற்கு ஆஸ்பத்ரியிலிருந்து வந்தாள். இந்த அதிர்ச்சியான விஷயத்தைக் கேட்டவுடனே என் மனைவி இறந்துவிட்டாள்! ஏதோ நாங்களும் காலத்தைத் தள்ளுகிறோம்!...

சர்மா:—(பேந்தப்பேந்த விழிக்கிறார்)பிறகு அவர்கள்?

லக்ஷ்மீ:—ஆமாம்... அவர்களுடைய அக்ரமத்தை பகவான் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு தூங்கவில்லை. சரியானபடி சூடுபோட்டுவிட்டான். வரதக்ஷிணை என்று அலைந்த ராக்ஷஸன் இருக்கிறானே—பிள்ளையின் தகப்பன்—அவனுக்கு ஆபீஸில் ஏதோ தண்டாபேரம் உண்டாகி சக்கையாய் 7 வருஷம் சிறைவாஸத்தைப் பருமானமாய்க் கொடுத்தார். அந்த அயோக்யப் பிள்ளைக்கு யாரும் பெண் கொடுக்காமல் துரத்தியடித்தார்கள். எங்கேயோ சறுக்கிவிழுந்து அவனுக்கு காலே உடைந்து கட்டைக் கால் பெரியவராயிருக்கிறாராம்!...சனியன்கள்! எது எப்படிப்போனால் என்னசார்? என்குழந்தையின் கதி அதோ கதியாகிவிட்டது! இதோ இன்றையபத்ரிகையில்பாருங்கள், வரதக்ஷிணையின் அலங்கோலம் என்று தலையங்கம் போட்டிருக்கிறது. சீர்வகைகள் போதாதென்று பெண்ணைப் படுத்தினார்களாம். அது தாளாமல் பெண் தற்கொலை புரிந்துகொண்டாளாம்.

சர்மா:—உலகம் இப்படியா இருக்கு?...

லக்ஷ்மீ:—உம்.. அதுமட்டுமா? இதோ இந்தப்பத்தியைப் பாரும்...வரதக்ஷிணை வரதக்ஷிணை என்று அலைந்து பெண்ணை மணந்த பாவிகள் கொடுமை செய்ததை அறிந்து போலீஸார் அந்த மகானைக் கைது செய்திருக்கிறார்கள். பெண்ணை அந்த மனிதனே கொள்ளிக்கட்டையால் சூடவந்ததை பக்கத்துவீட்டுக்காரர் பார்த்து கம்ப்ளைண்டு கொடுத்துவிட்டாராம்...ஸார்! இதுகூடப் போதாது ஸார்! வரதக்ஷிணை...சீர்வகை என்று கத்துறகி

பாவிகள் சிலரை நன்ருக அடித்துக் கைகால்களை முறித்து விட்டால்.....

[சர்மா இடத்தைவிட்டு எழுந்து ஏதோ மாதிரி விழிக்கிருர். பலவிதமான பயங்கரக் காட்சிகள் உரு வெளித்தோற்றத்தில் தோன்றி வதைக்கின்றன. என்ன சார் என் சரித்திரம்...]

சர்:—சேச்சே!..அப்படி எல்லாம் ஒன்றுமில்லை இன்று இரவு வண்டிக்கே புறப்படவேண்டுமென்று நான் போட்ட ப்ளான்படி கிளம்பவேண்டும் ஸார்! அங்கு அவசரமாக ஜோலி இருக்கிறது. மணி 6 ஆகிறது. நான் இப்போதேஉத்திரவு வாங்கிக்கொள்கிறேன்...(போகிருர்.)

(காட்சி முடிகிறது.)

## 14-வது காட்சி

### இடம்: சர்மா வீடு

இந்:—என்னம்மா செய்வது? அண்ணவை எங்குத் தேடியும் காணவில்லையே!...மூன்று நாட்களாகிவிட்டதேம்மா...மாமா ஊரில்கூட இல்லை என்று கடிதம் இதோ வந்திருக்கிறதே. அப்பாவும் ஊரிலில்லை. இன்னும் நாம் எங்கு தேடுவது?

மீனு:—எனக்கு ஏதோ சங்கடம் பண்ணுகிறது. பெத்த பிதாவே ஒருபிள்ளைக்குச் சத்ருவாக இருந்தால் என்ன தான் செய்வதம்மா! அந்த ஒரு குழந்தையையும் இழந்து இவர் வாரிக் கட்டிக்கொள்ளப்போவது என்ன இருக்கிறது! அவன் என்ன ஒட்டுக் குழந்தையா? படித்த விவேகி, வயது வந்தவன்; தன் விருப்பத்தை நிறைவேற்ருத கோவத்தில் எங்காவது தற்கொலைபுரிந்து கொண்டிருப்பானே...(புலம்புகிருள்.)

இந்:—அம்மா! அழாதேம்மா! இன்றைக்கும் வரவில்லை என்றால் நான் அப்பாவுக்கு தந்தியடித்து விடுகிறேன்! பத்திரிகையில் விளம்பரமே போட ஏற்பாடுசெய்கிறேனம்மா!

சர்மா:—(அவசர அவசரமாக) சேகர்...சேகர்! இந்திரா! சேகர் எங்கேம்மா?...

இந்:—(பரபரப்புடன்) உங்களுக்கு எப்படியப்பா தெரியும்?..

சர்மா:—என்னது!...எனக்குத் தெரிவது?...

மீனா:—மூன்றுநாளாகிறது குழந்தை சேகரனைக் காண வில்லை.

இந்:—அவனைத் தேடாத இடமில்லையப்பா! முற்றி லும் தேடிவிட்டேன். அண்ணாவைக் காணவில்லை. அம்மா அன்றுமுதல் தண்ணிகூடக் குடிக்கவில்லை. எல் லாம் உங்கள் பணப் பேராசையின் கொடுமையால்தான் நேர்ந்தது.

சர்மா:—என்ன! என்ன! சேகரை மூன்று நாட்களாகக் காணவில்லையா?...ஐயையோ! நான் ஒன்று எண்ணி வந்தேன். இங்கு ஒன்றாக ஆய்விட்டதே...

இந்:—ஏன்?...இன்னும் பத்துலக்ஷரூபாயுடன் ஏதாவ தொரு அழுகப் பிண்டத்தைத் தேடிக்கொண்டு வந் தீர்களா?...

சர்மா:—இந்திரா!...என்னைக் குத்திக்காட்டாதே!..... நான் புத்திகெட்டத்தனமாக நடந்துவிட்டதை இப்போது தான் உணர்கிறேன்.

இந்:—என்ன...நிஜமாகவா?...உங்கள் பணப்பேராசை ...வரதக்ஷிணை சீர்வகைகள் ஆகிய கருமேகங்கள் உங்கள்

இதயவானத்திலிருந்து விலகி அன்பு அருணோதயம் ஆய் விட்டதா?...

சர்மா:—ஆகா!...என்ன அருமையான உபமானம்! என்ன கவிதா ரஸம் நிறைந்த பதங்கள்! இந்திரா!... உண்மையில் மேகங்கள் நீங்கி அருணோதயம் ஆனதை நான் நேற்று லக்ஷ்மீபதியின் உரைகளால்தான் உணர்ந்தேன். இப்போதே வந்து முதலில் மைதிலியை சேகரனுக்கு மணம்செய்துவிட்டு மறுகாரியம் பார்க்க எண்ணி ஓட்டமாக வந்தேன். சேகரைக் காணவில்லை என்று இடி இடித்ததுபோல் பேசுகிறாயே!...என்ன செய்வேன்?...

[சேகரனின் சிநேகிதர்கள் பலர்,'சேகர் வந்தானா?' என்று கேட்கிறார்கள்]

மீனா:—நான் அப்போது முட்டிக்கொண்டதை நீங்கள் லக்ஷ்யம் செய்தீர்களா? ஒரே ஒரு குழந்தையின் மனத்தை களிக்கச்செய்யாமல் இப்படி கலங்கவைப்பார்களா என்று நான் கேட்டதற்கு சின்ன குழந்தைபோல் அடித்தீர்கள். இப்போது தெரிகிறதா என வார்த்தையின் பலன்?

சர்மா:—மீனா! என்னை மன்னித்துவிடு. நீயும் இப்படி குத்திக்காட்டாதே. இப்போது நான் எப்படி, எங்கு போய் அவனைத் தேடுவேன்?

தபால்காரன்:—ஸார்! போஸ்டு. இந்திராதேவிக்கு...

(இந்திரா ஓடிப்போய் வாங்கிவந்து படிக்கிறாள்.)

"சௌபாக்யவதி இந்திராவுக்கு ஆசீர்வாதம். உபய க்ஷேமம். நாம் ஒன்று நினைத்தால் கடவுள் ஒன்று நினைக்கிறார். சௌ. மைதிலிக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது...

சர்மா:—என்ன?...கல்யாணம் நிச்சயமாகிவிட்டதா?... மேலே படி...உம்!...

மீனு:—என்னமோ நான் பண்ண பாவந்தான் இப்படி எல்லாம் மாறிவிட்டது...

இந்:—"முகூர்த்தம் இம்மாதம் 16-ந் தேதி. நீங்கள் எல்லோரும் கல்யாணத்திற்காவது கட்டாயம் வந்திருந்து நடத்தக்கோருகிறேன். இதற்கும் உங்கப்பா,உங்கம்மாவை அனுப்பப் பணம் கேட்டால்...இந்திரா!...மைதிலி உன்னை பத்துநாள் முன்னதாகவே வரச்சொல்கிருள். தன் வந்தனத்தை சேகரனுக்குத் தெரிவிக்கச்சொல்கிருள். என் நமஸ்காரத்தை அக்கா, அத்திம்பேருக்குத் தெரிவி"...

அப்பா! போதுமா விஷயம்?

சர்மா:—இந்திரா! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே!...

மீனு:—எப்படித் தோன்றும்?...குழந்தைகள் ஒருவரையொருவர் எப்படித்தான் நேசித்தார்கள் என்றதை நீங்கள் அறிந்திருந்தால் இப்படியெல்லாம் நேருமா! எந்த மகராஜன் பாக்யசாலியோ அவன் என் மைதிலியை அடித்துக்கொண்டு போகிருன். எந்த புண்யவதியோ அந்த அருமைக் கிளியை மருமகளாக அடையப்போகிருள். எங்காவது என் மைதிலி நன்ருக இருந்தால் போதும்.

(கல்யாணத் தரகர் வருகிருர்)

தரகர்:—நமஸ்காரம் சர்மா!...சவுக்கியமா?...

சர்மா:—(பல்லைக் கடித்துக்கொண்டு)ஓய்!...மரியாதையாய் எழுந்து போகிறீரா? அல்லது கல்தா கொடுத்துத் தள்ளட்டுமா? பாவிமனுஷன்! ஏற்கெனவே இருந்த என் பணத்தாசையைத் துண்டிவிட்டு என்னை நாசமாக்கிய அயோக்யப் பதரே!...ஓடு!...உம்...நிக்கக்கூடாது!...

தரக:—இதென்ன ஸ்வாமிகளே?...

(போவது மறுபடி வருவது)

சர்மா:—ஸ்வாமிகளாவது! பூதங்களாவது!...போய் விடு!...

தரக:—ஒரு நல்ல வரன்...

சர்மா:—தூத்தூ! பேமானி ஜென்மம்...நல்லவரனும், பொல்லாத வரனும்! சொல்லாது எழுந்து போயிடுன்னு... (கையைப் பிடித்து வெளியே தள்ளுகிறார்.)

(சேகரனின் சினேகிதன் ஓட்டமாக வருகிறான்.)

சினேகிதன்:—சார்! சேகரன் நிர்மலபுரியில் இருக்கிறான்; சார்! இதோ பத்ரிகையில் நியூஸ் வந்திருக்கிறது.

[மீனு இந்திரா சர்மா மூவரும்] ஹா...என்ன! என்ன! ...பத்ரிகையில் வந்திருக்கிறதா? இப்படி கொடு...கொடு... (சர்மா பத்ரிகையைப் படிக்கிறார்.)

## வரதக்ஷிணை ஒழிப்புச்சங்கம்

திறப்புவிழா வெகு விமரிசையாக நடந்தேறியது. இளைஞர்கள் பலர் கலந்துகொண்டார்கள். சுப்ரமண்யன் M. A. தலைமை வகித்தார். சேகரன் என்கிற வாலிபர் வெகுவெகு அத்புதமாய்ப்பேசி, சபையோர் மனத்தைப் பரவசமுறச்செய்தார். வரதக்ஷிணையின் கொடுமையினால் நடக்கும் அநியாயங்களைப் பல உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி உருக்கமாயும் வீரமாயும் உணர்ச்சிததும்பப் பேசினார்...

சர்மா:—மீனு!...இந்திரா!...இவ்வளவுதானே நமக்கு வேண்டியது;இனிமேல்நிதானமாகப் படிக்கலாம். அந்தவரதக்ஷிணை ஒழிப்புச் சங்கத்தில் இப்பவே நானும் மெம்பராயிட்றேன். முதல்லே எனக்குக் காப்பி கொண்டுவா! நான் குடித்துவிட்டு இப்போதே மாமா ஊருக்குப்போய் மைதிலியை அதே முகூர்த்தத்தில் நம்ம சேகருக்கே

கொடுத்துகல்யாணத்தைப்பண்ணும்படி ஏற்பாடு செய்து விட்டு அவர்களையும் அழைத்துக்கொண்டு வந்துவிடு கிறேன். பையன் என்ன இருந்தாலும் கெட்டிக்கார னில்லே? அசட்டுப்பிசட்டுன்னு காரியம் செய்வானு என்ன?...சரி...நான் வருகிறேன்!

இந்:—அப்பாடா! இப்பதான் என் மனத்தில் அம்ருத தாரை பொழிவதுபோலிருக்கிறது. அம்மா! நீ நல்ல பாக்யசாலி; இனி கவலைப்படாதே. நாளையே முதலில் நம் கிரகலக்ஷ்மிவந்துவிடுவாள். இப்பொ எனக்கு குதிக்கணம் போலிருக்கிறது.

மீனு:—என்ன! இதோ பாருங்கோ ! திடுதிடுன்னு போய் அந்த பிள்ளைக்குக் கலயாணத்தை நிறுத்திவிட் டால் அது நியாயமா! அவாளிடம் கலந்து யோசனை செய்து அந்த பையனுக்கு நம்ம இந்திராவைக் கொடுப்ப தாக நிச்சயம்செய்துவிடுங்களேன். என்னம்மா இந்திரா?...

சர்மா:—பலே பேஷ்! என்ன இருந்தாலும் நீ மந்திரி மதியுடைய மாணிக்கமடீ! சபாஷ்!...அவர்களுக்கும் மனஸ் தாபமில்லாமே நம்ம குழந்தைகளுக்கும் வருத்தமில்லாமே ...எப்படீ...வெகு சரியான பேச்சு. அப்படியே செய்துவிட லாம்...அப்பொ ஒன்னு பண்ணலாமே; அந்த பையனும் இந்திராவைப்பார்க்கணும்;இந்திராவும்...(கண்ணடிக்கிருர்) உடனே கிளம்புங்கள்...

மீனு:—என்ஜென்மத்தில் என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்துப் பேசுவது இன்னிக்குத்தான் நான் கண்டேன்; சரி, இந்திரா!...கிளம்பும்மா!...

[இந்திரா சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்து ஓடுகிருள்]

காட்சி முடிகிறது.

## 15-வது காட்சி

[நிர்மலபுரி ஆச்ரமம்: மாணவர்கள் ராட்டையில் நூற்பது: சேகரன் ப்ரஸங்கம் செய்வது.]

சேகரன்:—நண்பர்களே! நாம் வரதக்ஷிணை ஒழிப்புக் சங்கம் ஆரம்பித்து ஒரு வாரங்கூட ஆகவில்லை. ஆனால் இதற்குள் எத்தனை பேருடைய பாராட்டுக் கடிதங்கள், 'நான் மெம்பராகிறேன், நான் மெம்பராகிறேன்' என்று எத்தனைபேர் கடிதமெழுதிச் சந்தாவும் அனுப்பி இருக்கிறார்கள் தெரியுமா! சாதாரணமான வியாதியை வேரறுக்கவேண்டுமானால் பலவிதமான அவுஷதங்கள், ஆயுதங்கள் முதலியவைகளை உபயோகித்துச் செய்துவிடலாம். இந்த வரதட்சிணை சீர்வரிசைகளுக்காகக் கொடுமைப்படுத்துவது முதலிய கொடிய வியாதிக்கு ஆயுதம், மருந்து இரண்டும் மாணவர்களாகிய நம்மையில்தான் இருக்கிறது. பெற்றவர்கள் நம்மை விலைகூறி விற்பது போன்ற அற்பகாரியத்தைச் செய்யத்துணிந்து ஏலம் போடும் கண்ராவிக்கூட்டத்திற்கு நாம் இனி இடம் கொடுக்கவே கூடாது. கட்டாயம் இதை தைரியமாக எதிர்த்தே தீரவேண்டும். சக்தியானுஸாரம்செய்து பெண்ணைக் கொடுக்கிறவர்களுக்கு மனச்சந்தோஷத்துடன் பெண்ணை நாம் மணக்கவேண்டுமேயன்றி வரதட்சிணை கேட்கும் அப்பாஅம்மாவுக்குச் சரியானபடி புத்திகற்பிக்கப் பாடுபடவேண்டும். இதில் கோழைத்தனமோ, தாட்சிண்யமோ கொள்ளக்கூடாது. நாம் தைரியமாக நின்று 'மாட்டோம்' என்று பிடிவாதம் செய்தால் இந்த வேர்ப் புழுகை வெட்டி எறியலாம். அக்ரமத்திலும் அக்ரமமான இந்த செய்கையைக் கூடியவரையில் ஒழித்து ஏழைமக்களுக்கு உதவிபுரிய இந்த சங்கம் பாடுபடவேண்டும். சாதாரணமாய் வாயினால் சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது; நாடகங்கள், பாடல்கள், சினிமாக்கள், வெறும் தெருக்கூத்துமுதல் பலவிதத்திலும் இக்கொடுமையைக் கண்டித்துக்காட்டி மக்களைத் திருத்தவேண்டும்.

நேயர்களே! செல்வச் சீமான்களைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. பத்துலக்ஷம் வரதக்ஷிணை கொடுப்பார்கள். 20 லக்ஷம் செலவழித்துச்சீர்வகைகள்செய்வார்கள். அதில் அதிசயமோ ஆபத்தோ இல்லை. கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி...என்று நாம் சிறுவயதில் படித்தபாடம் இருக்கிறதே, அதுபோல் பணக்காரனைப் பார்த்துத் தானும் செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டு விரலுக்கு மேல் வீக்கம் உண்டாகித் துன்பப்படுகிறார்களே! அத்தகைய குணத்தைப்போக்கித் தன்னிலைமைக்குச் சரியாகத் தான் வாழவேண்டிய மார்க்கத்தை முதலில் கற்பிக்க வேண்டும். இந்த நிலை உண்டானால், மேல் சொன்ன டம்பாசாரித்தனம் குறையும்.

ஏழைகள் வீட்டில்தான் இந்த வரதக்ஷிணைப் பேய் ஆடுகிற ஆட்டம் சகிக்கமுடியவில்லை! நாம் வீடுவீடாகப் புகுந்து ப்ரசாரம் செய்யவேண்டும்.

[சர்மா, மைதிலீ, மீனா, இந்திரா, நாகஸாமி முதலிய சகலரும் வருகிறார்கள். சேகரன் பேச்சைக் கேட்டவாறு மறைவிலேயே நின்று பூரிக்கிறார்கள்.]

வரதக்ஷிணைக் கொடுமை ஒழிந்தால் குடும்பங்கள் சீர்படும். அமைதி நிலவும். தரித்திரத் தாண்டவத்தில் உழல்வது குறையும். பெண்கள் கவலையற்று இன்பவாழ்க்கை வாழ்வார்கள். தம்பதிகளிடையே தேனும்பாலும் போன்ற ஒற்றுமையும் அன்பும் பொலிந்து நிற்கும். குடும்பத்தில் ஐக்யம் வளரும். பணத்திற்காக அன்பைத் துறந்து அல்லல்படும் கொடுமை ஒழியும்...

**சர்மா:**—(தடதடவென்று கூட்டத்தில்வந்து)சேகர்!... இதோ! அன்பின் கனியை இங்கேயே தேடிக்கொண்டு வந்துவிட்டேன். நீ இனி துன்பப்படவேண்டாம். என்னை மன்னித்துவிடு. ஆசை மேகம் நீங்கி அன்பு அருணோதயமாகிவிட்டது. மைதிலீ!...இங்குவாம்மா!...

[எல்லோரும் வருகிறார்கள்.]

NSI

மீனு:—என்னப்பனே சேகர்! தீர்க்காயுஷ்மான் பவ... என் வயிற்றில் பகவான் பாலை வார்த்தார்.

இந்:—அண்ணா! அண்ணா...இதோ பாரு!

சேகர்:—அப்பா!...அம்மா!..எனக்குஇப்போது பேசவே தெரியவில்லையே...நிஜமான காட்சியையா நான் காண்கிறேன்? இந்திரா...மைதிலீ...மாமா...

108632

[மைதிலியை ப்ரேமையுடன் பார்க்கிறான். அவளும் தன் அன்பைக் காட்டிப்பார்க்கிறாள். அதைக் கண்ட சர்மாவும் மீனுவும் ஒருவரையொருவர்பார்த்துப் பூரிக்கிறார்கள்.]

சேகர்:—அப்பா! இந்த அருணோதயம் இப்படியே இருக்குமோ? மறுபடியும் மேகம் சூழ்ந்து இருண்டு விடுமோ?

சர்மா:—போடா அசடே! 16-ந் தேதி உனக்கும் மைதிலிக்கும், இந்திராவுக்கும்கேசவனுக்கும் விவாகம்; முகூர்த்தங்கூட வைத்தாகிவிட்டது. வா! நாம் ஊருக்குப் போகலாம்!...விவாகம் முடிந்தபிறகு இங்கு தம்பதிகளாக வந்து சேவைசெய்யலாம். உன் நண்பர்களையும் நான் இப்போதே அழைத்துவிடுகிறேன்......நீங்கள் எல்லோரும் வந்து விவாகத்தைச் சிறப்பாக நடத்தி ஆசீர்வதிக்கவேண்டும்!

சேகர்:—ஏம்பா! தரகருக்கு...

சர்மா:—போடா! குறும்புப் பயலே! அந்தப்படுபாவியாலேதான் என் தலையும் சற்று கிறுகிறுத்தது. இனிமேல் தரகனாவது! தடியனாவது!...

[சங்கத்தினர் சேகருக்கும், மைதிலிக்கும் மாலைபோடுதல்; ஜேகோஷம் போடுதல்; மங்களம்பாடி ஆரத்தி எடுத்தல்.]

மங்களம்!

42526

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய 94 நாவல்கள்

வைதேகி
பத்மசுந்தரன்
சண்பகவிஜயம்
ராதாமணி
கௌரீமுகுந்தன்
நவநீதகிருஷ்ணன்
கோபாலரத்னம்
மாதவமணி
சாருலோசனை
சுகந்த புஷ்பம்
வீரவஸந்தா
சாமளநாதன்
ருக்மிணீகாந்தன்
ஸாரமதி
நளினசேகரன்
பரிமளகேசவன்
மூன்று வைரங்கள்
உத்தமசீலன்
* கதம்பமாலை
* ஸரஸராஜன்
காதலின் கனி
சோதனையின் கொடுமை
படாடோபத்தின் பரிபவம்
தியாகக்கொடி
ஜெயஸஞ்சீவி
பக்ஷமாலிகா
புத்தியே புதையல்
மங்கள பாரதி
பட்டமோ பட்டம்
சுகுணபூஷணம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
அம்ருததாரா
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
ப்ரேமப்ரபா
அன்பின் சிகரம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
வானக்குயில்
உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
ஜீவியச் சுழல்
மாலதி
வத்ஸகுமார்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
படகோட்டி
ஆத்மசக்தி
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்
கருணாலயம்
புகழ்மாலை
தயாநிதி
சுடர் விளக்கு
கலாநிலயம்
ஞானதீபம்
வாத்ஸல்யம்
க்ருபாமந்திர்
மதுரகீதம்
பிரார்த்தனை
இதய ஒலி
மலர்ந்த இதழ்
அமுதமொழி
ப்ரதிக்ஞை
ஆசைப்ரவாகம்
வாழ்க்கைத் தோட்டம்
அபராதி
வெளுத்த வானம்
ப்ரதிபலன்
பவித்திரப்பதுமை
பெண் தர்மம்
உண்மைச்சித்திரம்
தெய்வீக ஒளி
சிலாசாஸனம்
புதுமைக்கோயில்
மனத்தாமரை
தபால் விநோதம்
ஓவியப்பரிசு
இனியமுரசு
ஆண்டவனின் அருள்
இசைப்புயல்
அமரத்யாகி
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
ஜீவநாடி
வீராங்கனை
கானகலா
தூயஉள்ளம்
சௌபாக்யவதி
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்

ஷை நாவல்களில் பெரும்பாலும் தற்போது கைவசமில்லாததால், வாசகர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்கள் கிடைக்குமா என்றும், தற்கால விலையையும்பற்றி முதலில் எழுதித்தெரிந்துகொண்டு பிறகு பணமனுப்பவும்.

Jaganmohini Press, Triplicane. (கூ௫௦க)